REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN தினகரன்

2023 ஏப்ரல் 12 புதன்கிழமை

வரு. 91 இல. 87 | Wednesday 12, April, 2023 | 12பக்கங்கள் | 50/-

## உணவு சட்டங்களை மீறிய 3000 உணவகங்களுக்கு வழக்கு

### PHI சங்கம் தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

உணவு சட்டங்களை மீறியுள்ள 3000 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்கு தொடர நடவடிக்கை எடுத்துள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. 04

## நாட்டுக்கு தேவையான புதிய வேலைத்திட்டம் முன்னெடுக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

### அனைத்து பிரதான அரச அதிகாரிகளை சந்தித்து உரையாடவுள்ளதாக ஜனாதிபதி தெரிவிப்பு



நாட்டுக்கு அவசியமான புதிய வேலைத்திட்டத்தை முன்னெடுக்க சகலரும் ஒன்றிணைய வேண்டுமென ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இது தொடர்பில் புத்தாண்டின் பின்னர் அமைச்சுக்களின் செயலாளர்கள், அதிகார சபை, ஆணைக்குழுக்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களை சந்தித்து கலந்துரையாடவுள்ளதாகவும் அவர், தெரிவித்துள்ளார். நுவரெலியா நகர அபிவிருத்தி தொடர்பில் நுவரெலியா மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். இது 04

## எல்ல ரயில் நிலைய பகுதியை சுற்றுலா பகுதியாக்கி மாடி வீட்டுத்திட்டம் அமைப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

### வெளிநாட்டு முதலீட்டாளர்களின் உதவியுடன் மேற்கொள்ள அமைச்சர் பந்துல எதிர்பார்ப்பு



எல்ல, ரயில் நிலையத்திற்கு முன்பாக அமைந்துள்ள சுற்றுலாப் பகுதியை அபிவிருத்தி செய்யவும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் உதவியுடன் அங்கு மாடி வீட்டுத் தொகுதியை அமைப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அப்பகுதிக்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள அமைச்சர், அது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடியதுடன் அதற்கான முதலீடுகளுக்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களை எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எல்ல ரயில் நிலைய பிரதேசத்தில் ரயில்வே நிலைய அதிபரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் 04

# எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் புதிய அறிக்கை பிரதமரிடம் கையளிப்பு

### உறுப்பினர் எண்ணிக்கையை 4,714 ஆக குறைக்கும் யோசனையும் உள்ளடக்கம்



### பாராளுமன்ற சட்டமொன்றின் மூலம் அன்றி தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்பு மனுக்களை இரத்துச் செய்ய முடியாது என ஆணைக்குழு தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

புதிய எல்லை நிர்ணய அறிக்கை, எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவினால் நேற்று பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

புதிய எல்லை நிர்ணய அறிக்கையில் உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 4,714 ஆகக் குறைப்பதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் 04

## பயணிகளால் நிரம்பி வழிந்த கோட்டை ரயில் நிலையம்



தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு தங்களது சொந்த ஊர் நோக்கி புறப்படுவதற்காக வந்த பயணிகளால் கொழும்பு கோட்டை ரயில் நிலையம் நேற்று நிரம்பி வழிந்தது. தூர இடங்களுக்குச் செல்லும் ரயில்களுக்காக பெருந்திரளானோர் காத்து நின்றதையும் காணக்கூடியதாக இருந்தது. (படம்: சுலோச்சன கமகே)



## கடவுச்சீட்டு விண்ணப்பங்களை கையளிக்க கால அவகாசம்

இன்று நண்பகலுக்குள் ஒப்படைக்க கோரிக்கை 04

## மருதமுனை சுனாமி வீட்டுத்திட்டம் 16 வருடங்களின் பின்னர் கையளிப்பு

### முஷாரப் எம்பியின் முயற்சிக்கு வெற்றி



கல்முனை மத்திய தினகரன், அட்டாளைச்சேனை விசேட நிருபர்

சுனாமியால் (2004) வாழ்விடங்களை இழந்த மக்களுக்காக கட்டப்பட்ட மருதமுனை மேட்டு வட்டை வீட்டுத்திட்டம், 16 வருடங்களின் பின்னர் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இவ்வீடுகள் கையளிக்கப்படாதுள்ளமை குறித்து கல்முனை பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டத்தில்,

கடந்த மார்ச் (16) ஒருங்கிணைப்புகுழு தலைவர் முஷாரப் எம்பியின் கவனத்துக்கு கொண்டுவரப் பட்டிருந்தது. இதையடுத்து, பயனாளிகளுக்கு அவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்திருந்தார்.

'வீடுகளுக்கு சிறு சேதங்கள் ஏற்பட்டிருந்தாலும் அவற்றை 11

## மரண தண்டனை கைதிகளுக்கு புனர்வாழ்வளிக்க அரசு திட்டம்

### நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



எத்தகைய குற்றங்களை புரிந்தோராயினும் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் சிறைக் கைதிகளை பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகுமென நீதி மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நாட்டிலுள்ள 04


## பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த உலக வங்கி தொடர்ந்து உதவும்

### வொஷிங்டனில் நடத்திய சந்திப்புக்களில் திருப்தி




இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த உலக வங்கி தொடர்ந்து ஆதரவளிப்பதற்கு உறுதியளித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான்சேமசிங்க தெரிவித்துள்ளார்.

2023 வசந்த கால கூட்டங்களில் கலந்துகொள்ள 11




## நீர் கட்டணம் செலுத்தாத அரச நிறுவனங்களுக்கு அபராதம்

### தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை



குடிநீர் கட்டணத்தின் நிலுவைத் தொகையை இம்மாதம் முதல் செலுத்தாத சகல அரச நிறுவனங்களதும் நீர் கட்டண பட்டியல்களிருந்து 2.5 சதவீதம் மேலதிக கட்டணத்தை அபராதமாக வசூலிப்பதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தீர்மானித்துள்ளது.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரச நிறுவனங்கள், 70 கோடி ரூபாவுக்கும் அதிகமான நீர் கட்டணத்தை தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு செலுத்தத் 04

### பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம், 13 ஆவது திருத்தம்

## அரசின் நிலைப்பாடுகள் குறித்து சர்வதேசத்துக்கு அமைச்சர் விளக்கம்



அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் மற்றும் முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில், அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து சர்வதேச சமூகத்துக்கு வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி விளக்கமளித்துள்ளார். 11

## சுற்றுப் பயணங்கள் செல்வோர் இரகசியம் பேணவும்

### சமூக வலைத்தளங்களில் பகிர வேண்டாம்



தமிழ், சிங்கள புத்தாண்டு பண்டிகைக் காலத்தில் திட்டமிடப்பட்ட சுற்றுப்பயணங்கள் தொடர்பான தகவல்களை முகநூல் போன்ற சமூக ஊடகங்களில் பகிர 04




## போலி நாணயத்தாள்களை சந்தைக்குள் புகுத்த முயற்சி

அவதானத்துடன் செயற்படுமாறு எச்சரிக்கை 04



## பால் மா விலை மேலும் குறையும் சாத்தியம்

இறக்குமதியாளர் சங்கம் 04



## வேகமாக பரவும் காய்ச்சல் இதுவரை 15 பேர் மரணம்

சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை 04

## இலங்கையில் தளம் அமைக்கும் நோக்கம் அமெரிக்காவுக்கு இல்லை

### அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

இலங்கையில் இராணுவத் தளம் அமைப்பதற்கான எத்தகைய நோக்கமும் அமெரிக்காவுக்கு கிடையாது என அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க பாதுகாப்பு உயர்மட்ட அதிகாரியின் இலங்கை விஜயம் இது தொடர்பானதல்ல என்பதை உறுதிப்படுத்தியுள்ள அவர், இலங்கையில் 04

## ராஜித எம்பியை விசாரிக்க ஒழுக்காற்று குழு நியமனம்



ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ணவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கென, ஐக்கிய மக்கள் சக்தி விசேட ஒழுக்காற்று குழுவொன்றை நியமித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி,இது குறித்து நேற்று முன்தினம் கலந்துரையாடிய பின்னர் இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாகக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாட்டுக்கு எதிராகப் 11

## வங்கி ATM அட்டைகள் மூலம் பண மோசடி



போலி ஏ.ரி.எம். அட்டைகளை பயன்படுத்தி பணத்தை திருடியவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இவரிடமிருந்து 15 போலி ஏ.ரி.எம் அட்டைகளும் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பணம் திருடப்படுவதாக 04

# நகர்வலம்



## ஹாஷிம் உமர் பௌண்டேசனின் இப்தார் நிகழ்வு











ஹாஷிம் உமர் பௌண்டேசன் நடத்திய இப்தார் நிகழ்வு கொழும்பு சங்ரிலா ஹோட்டலில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை (10) மாலை பௌண்டேசனின் ஸ்தாபகத் தலைவரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகருமான புரவலர் ஹாஷிம் உமர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அரச மற்றும் தனியார் துறைகளின் தலைவர்கள், பணிப்பாளர்கள், ஊடக நிறுவனங்களின் பிரதானிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் என பலர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க உரையாற்றினார். இதன்போது சீட்டிழுப்பும் இடம்பெற்றது. சீட்டிழுப்பின் ஊடாக தெரிவான ஆறு பேருக்கும் பெறுமதிமிக்க கையடக்கத் தொலைபேசிகள் வழங்கப்பட்டன.

### களுத்துறை மாவட்ட தமிழ் மொழி மூல

## பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைக்கு விரைவில் தீர்வு

### கல்வியமைச்சர் சுசில், இம்தியாஸ் பாக்கீர் மாக்காரிடம் உறுதி

*அஜ்வாத் பாஸி*



களுத்துறை மாவட்டத்திலுள்ள தமிழ் மொழி மூல பாடசாலைகளில் அண்மைக்காலமாக நிலவி வருகின்ற ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவை சந்தித்து குறைபாடுகள் தொடர்பில் நீண்டநேரம் கலந்துரையாடியுள்ளார்.

களுத்துறை மாவட்டத்திலுள்ள களுத்துறை, ஹொரணை, மதுகம ஆகிய கல்வி வலயங்களிலுள்ள தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில் நிலவி வருகின்ற ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பில் கல்வியமைச்சருடன் நடைபெற்ற கலந்துரையாடல் மிகவும் வெற்றிகரமாக இருந்ததாகவும் மேற்படி பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறைக்கு விரைவில் தீர்வை பெற்றுத்தருவதாக தன்னிடம் உறுதியளித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் நம்பிக்கை தெரிவித்தார்.

மேற்படி மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரை அண்மையில் கொழும்பில் சந்தித்து பாடசாலைகளின் குறைநிறைகள் தொடர்பில் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்தும் தமிழிசையாய்க் கூத்திசை



*கொழும்பு தமிழ்ச் சங்க நிர்வாகக்குழு உறுப்பினர் சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா தலைமையில் எதிர்வரும் (15) சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு 'தமிழிசையாய்க் கூத்திசை' நிகழ்வு கொழும்பு தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பேராசிரியர் சி.மௌனகுரு மற்றும் வைகை வாசுகி ஆகியோரது நெறியாள்கையில் ஆற்றுகைக் கோலங்கள் இடம்பெறும். நன்றியுரையை கொழும்பு தமிழ்ச் சங்க உறுப்புரிமைக்குழுச் செயலாளர் கே.பொன்னுத்துரை நிகழ்த்துவார்.*



ரமழானை முன்னிட்டு ஈரான் இஸ்லாமியக் குடியரசைச் சேர்ந்த காரி செய்யத் ஜாஸிம் மௌலவி இலங்கைக்கு வருகை தந்துள்ளார். இவர் நாட்டிலுள்ள பள்ளிவாசல்களில் கிராத் நிகழ்வையும் மேற்கொண்டு வருகின்றனர். இதனை ஈரானின் கலாசார நிலையம் ஏற்பாடு செய்துள்ளது. கடந்த சனிக்கிழமை இரவு தராவீஹ் தொழுகையின் பின் கொழும்பு கொள்ளுப்பிட்டி ஜும்ஆப் பள்ளிவாசலில் அன்னாரின் கிராத் இடம்பெற்றது. ஈரான் கலாசார நிலையத்தின் கொன்சிலோர் கலாநிதி பஹ்மான் மொஅஸமிலும் கலந்து கொண்டார். *(படம்: ருஸைக் பாரூக்)*

## உடப்பு சின்னக்கொளனியில் மீன்வாடி எரிந்து நாசம்

*உடப்பு குறூப் நிருபர்*



*உடப்பு சின்னக்கொளனி கடற்கரையில் அமைந்துள்ளன மீன்வாடி ஒன்று தீப்பிடித்து எரிந்துள்ளது. திரு.க.வைரடப்பன் அவர்களுக்கு சொந்தமான கரைவலைப்பாட்டில் இந்த அனர்த்தம் ஏற்பட்டது. திரு. விநாயகமூர்த்தி சம்மாட்டியார் என்பவர் இந்த கரைவலையை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும். திங்கட்கிழமை (10) இரவு 10 மணியளவில் இந்த மீன்வாடி திடீரென தீப்பற்றி எரிந்ததாக அருகில் வசிக்கும் மக்கள் குறிப்பிட்டனர்.*

*மீன்வாடியில் காவலில் இருந்த வயோதிபர் கூறுகையில், தாம் உறங்கும் போது குப்பிலாம்பை அணைத்துவிட்டு உறங்கியதாகவும் தீப்பிடித்தது எவ்வாறு என்பது தனக்கு தெரியவில்லை என்று குறிப்பிட்டார். இதன் போது மீன்வாடி முற்றாக எரிந்துள்ள நிலையில் உள்ளேயிருந்த இயந்திரப்படகு என்ஜின் மற்றும் சில உபகரணங்கள் அயலில் இருந்தவர்கள் மூலம் வெளியில் எடுக்கப்பட்டுள்ளது.*


# பெறுகை ஆவணங்கள்

இலக்கம் : MSD/CPMA/2022

**மருத்துவ வழங்கல் பிரிவின் உணவகத்தை நடத்திச் செல்லல் 2023/ 2024ம் ஆண்டு**

**பெறுகை விண்ணப்பங்கள் விநியோகிக்கும் இறுதித் திகதி : 2023.05.02**

**திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் : 2023.05.03 பி.ப. 2.00 இற்கு**

(கவனிக்கவும் :- கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன், கேள்விப் பத்திரங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் திறக்கப்படும் தினம் மற்றும் நேரத்தை குறிப்பிடுதல் வேண்டும்)

**மருத்துவ வழங்கல்கள் பிரிவு**
**இல. 357, வன பத்தேகம விமலவங்சஹிமி மாவத்த, கொழும்பு-10.**

# பெறுகை அறிவித்தல்

**இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம்**
**(கைத்தொழில்கள் அமைச்சு)**

**வகுப்பறைகளின் மேம்படுத்தல் செயற்றிட்டங்களுக்காக உபகரணம்/ அம்சங்களின் பெறுகை**

**வளிச்சீராக்கல் இயந்திரம் - SLITA/AC/01/2023**
**தளபாடம் - SLITA/FU/01/2023**
**சீரமைக்கப்பட்ட திரைகள் - SLITA/SB/01/2023**

1. உபகரணம்/அம்சங்களின் (வளிச்சீராக்கல் இயந்திரம்/தளபாடம்/சீரமைக்கப்பட்ட திரைகள்) வழங்கல் மற்றும் ஒப்படைத்தலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 2023 ஏப்ரல் 17 ஆம் திகதியிலிருந்து 2023 மே 02 ஆம் திகதியன்று வரையும் வார நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியிலுள்ள இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவன இயக்கத்திற்கான பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
3. விலைமனுக்கோரலானது தேசிய பெறுகை முகவராண்மையினால் பிரசுரிக்கப்பட்ட தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் நடாத்தப்படும்.
4. www.slita.lk என்ற எமது இணையதளத்திலிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை விலைமனுதாரர்கள் பெற்றுக் கொள்ளலாம். (வன் பிரதிகள் வழங்கப்பட மாட்டாது).
5. 2023 ஏப்ரல் 17 ஆம் திகதியிலிருந்து 2023 மே 3 ஆம் திகதி வரையும் விடுமுறைகள் நீங்கலாக வார நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் கணக்கிடல் பிரிவில் ரொக்கப் பணத்தில் கீழே வழங்கப்பட்டவாறான மீளளிக்கப்படாத கட்டணத்தை பணக்கொடுப்பனவாக செலுத்தலாம் அல்லது இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்தின் பெயரில் இலங்கை வங்கியின் இரத்மலான கிளையிலுள்ள 9521019 என்ற வங்கிக் கணக்கிற்கு செலுத்தப்படலாம் (குறிப்பு: வங்கியின் ரொக்கப்பண வைப்புத் துண்டில் வரவுவைப்பாளரின் விபரங்கள் மற்றும் வரவு வைப்பதற்கான நோக்கம் ஆகியன பூர்த்தி செய்ய்யப்படல் வேண்டும்)

| செயற்றிட்டம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபாவில்) | விலைமனுப் பிணை | மூடும் திகதி மற்றும் நேரம் | திறக்கும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| வளிச்சீராக்கி இயந்திரத்தின் பெறுகை | 3,000 | 95,000 ரூபா | 2023.05.03 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு | 2023.05.03 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு |
| தளபாடப் பெறுகை | 2,500 | 80,000 ரூபா | 2023.05.03 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு | 2023.05.03 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு |
| சீரமைக்கப்பட்ட திரையின் பெறுகை | 2,000 | 30,000 ரூபா | 2023.05.03 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு | 2023.05.03 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு |

6. விலைமனுக்கள் 2023 மே 3 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியிலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2023 மே 03 ஆம் திகதியன்று கீழேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படுவதுடன் அனைத்து விலைமனுக்களும் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிரகாரம் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம்,**
**கந்தவள தோட்டம் இல.: 02, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல வீதி, இரத்மலான.**
**தொலைபேசி: 011 2632406. தொலைநகல்: 0112636337**
**இணையதளம்: www.slita.lk**


## ரூ. 40 இலட்சம் பெறுமதியான தங்க நகைகள் திருட்டு

*நீர்கொழும்பு தினகரன் நிருபர்*

*தமது வீட்டுக்கருகிலுள்ள கத்தோலிக்க தேவாலயத்தில் பெரிய வெள்ளிக்கிழமை (7) இரவு ஆராதனையில் கலந்து கொண்டுவிட்டு வீடு திரும்பியபோது வீட்டின் அலுமாரி உடைக்கப்பட்டு 40 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பணம் திருடப்பட்ட சம்பவமொன்று ராகம, வெலிசர பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.*

*வெலிசர பிரதேசத்தைச் சேர்ந்த சில்லறை வியாபாரியொருவரின் வீட்டிலேயே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது . மேற்படி வர்த்தகர் தமது குடும்பத்தினருடன் கடந்த வெள்ளிக்கிழமை (7) இரவு விசேட பூசையில் கலந்து கொண்டுள்ளார் . அதன் போதே மேற்படி திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மகபாகே பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியின் பணிப்புரையில் மேற்கொள்ளப்பட்ட குறித்த சம்பவம் தொடர்பான விசாரணையின் போது 20 இலட்சம் ரூபாய் பணம் மற்றும் 10 பவுண் எடையுள்ள தங்க நகைகள் ஆகியவை திருடப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. மேற்படி திருட்டுச் சம்பவம் தொடர்பாக மகபாகே பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 ஏப்ரல் 12 புதன்கிழமை
தினகரன்
THINAKARAN



**தொழுகை நேரம்**
சுபஹ் - 04.48
லுஹர் - 12.13
அஸர் - 03.17
மஃரிப் - 06.19
இஷா - 07.30

**இன்றைய சுபதினம்**
சுபகிருது வருடம் பங்குனி 29
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

# அரச நிறுவனங்கள் மறுசீரமைப்பு விற்பனை செய்யும் நோக்கமல்ல

## நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரச நிறுவனங்கள் மறுசீரமைப்பு செய்யப்படவுள்ளதே தவிர, அவற்றை விற்பதற்கான தீர்மானமில்லையென நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

மறுசீரமைப்பு என்பது விற்பனை செய்வதல்ல என்றும் தெரிவித்துள்ள அவர், அரச ஏகாதிபத்தியத்தை மட்டுப்படுத்தி மக்களுக்குத் தேவையான சேவைகளை முறையாக வழங்குவதற்கு இத்தகைய மறுசீரமைப்பின் மூலமே வாய்ப்புகள் ஏற்படுமென்றும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சிப்போர் மறுசீரமைப்பு என்பற்கு, விற்பனை செய்யப்படுவதாக அர்த்தம் கற்பித்து வருகின்றனர். அவ்வாறில்லை. மக்களுக்கு தமது சேவைகளை இலகுவாகவும் முறையாகவும் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்தும் நடவடிக்கையாகவே அது அமையும்.

எரிபொருள் தொடர்பில் குறிப்பிடும் போது, எம்மிடமுள்ள அந்நிய செலாவணி தட்டுப்பாடு காரணமாக, அதனைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலை காணப்படுகிறது.

அந்தவகையில் எரிபொருளுக்கான தட்டுப்பாட்டை நீக்கி, போதுமானளவு அதனைப் பெற்றுக் கொள்வதற்கு வசதி

04

# நாட்டைவிட்டு வெளியேற திட்டம்; பனாமா கப்பலில் சிக்கிய 4 தமிழர்கள்!

பனாமா நாட்டுக்கு சொந்தமான CMA CGM சரக்குக் கப்பலில் சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயன்ற 04 தமிழர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கப்பலின் பணியாளர்களால் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு, காலி துறைமுக குடிவரவு குடியகல்வு திணைக்களத்திடம் (10) பிற்பகல் ஒப்படைக்கப்பட்டனர்.

கொழும்பு துறைமுகத்தில் கடந்த மார்ச் (24) நங்கூரமிட்டிருந்த கப்பலுக்குள் இந்த நான்கு தமிழர்களும் சட்டவிரோதமாக நுழைந்தனர்.

நேற்று முன்தினம் (10) பிற்பகல் இலங்கையை அண்மித்த இந்தக் கப்பல், காலி துறைமுகத்திலிருந்து 06 கிலோமீற்றர் தொலைவில் நங்கூரமிட்டிருந்தது.


# தமிழ் சிங்கள புத்தாண்டு

## விடுமுறை அறிவித்தல்

த அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட் இன் தலைமையகம் மற்றும் சகல கிளை அலுவலகங்களும் 2023 ஏப்ரல் 13, 14ம் திகதிகளில் மூடப்பட்டிருக்கும்.

ஏப்ரல் 14, 15ம் திகதிகளில் தினப் பத்திரிகைகள் மற்றும் 16ம் திகதி வார இறுதி பத்திரிகைகள் பிரசுரிக்கப்பட மாட்டாது.

LAKE HOUSE
த அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட்

# முக்கிய அறிவித்தல்

OREL IT நிறுவனத்தில் தொழில்வாய்ப்பு பெற்றுதருவதாக கூறி பல்வேறு வேலை வாய்ப்பு நிறுவனங்களும் தனிப்பட்ட நபர்களும் பணம் பெற்று ஏமாற்றுவதாக எமக்கு தெரியவந்துள்ளது. அவ்வாறு OREL IT நிறுவனத்தில் பணம் பெற்று தொழில் வாய்ப்பு பெற்றுக் கொடுக்க நாம் எந்தவொரு நிறுவனத்துக்கோ அல்லது தனி நபருக்கோ எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி வழங்கியதில்லை என்பதை கவனத்தில் கொள்ளவும்.

எந்தவொரு நிறுவனமோ அல்லது தனி நபரோ மேற்கொள்ளும் இத்தகைய மோசடி நடவடிக்கைகளுக்கு எமது நிருவனம் எந்த வகையிலும் பொறுப்பேற்காது அத்துடன் அத்தகைய நடவடிக்கைகளுக்கு பொறுப்புக் கூறும் கடப்பாடு எமக்கில்லை என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களுக்கு எங்கள் நிறுவனத்தில் இணைய விருப்பமாயின் உங்களின் CVயை careers@orelit.com என்ற எங்களின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி அல்லது 0115 706 700 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து எம்மோடு நேரடியாகவே தொடர்பு கொள்ளலாம். அதன்போது எமது மனித வள உத்தியோகஸ்தர்கள் உங்களுக்கு உதவுவார்.

# விலைமனுக் கோரல்

## முன்பள்ளி மாணவர்களுக்கான சீருடையை வழங்குதல்

தங்கல்ல பிரதேச சபைக்குச் சொந்தமான முன்பள்ளி சிறுவர்களுக்கு சீருடை வழங்குவதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன. உங்களால் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் முன்பள்ளி சிறுவர்களுக்கான சீருடையை வழங்குதல் என்று கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2023.04.25ம் திகதிக்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

**செயலாளர்,**
**தங்கல்ல பிரதேச சபை,**
**நெடொல்பிட்டிய.**
**தொடர்புகள்: 047-2240475**

# பெறுகை அறிவித்தல்

**இலங்கை தேசிய வைத்தியசாலை - கொழும்பு 10**

## இலங்கை தேசிய வைத்தியசாலைக்கு பொலிதின் குப்பை உறைகளை வழங்கல்

இலங்கை தேசிய வைத்தியசாலைக்குத் தேவையான பின்வரும் உருப்படியைக் கொள்வனவு செய்து கொள்வதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

| | விபரம் | குறியீட்டு இலக்கம் |
|---|---|---|
| 1. | பொலிதின் குப்பை உறைகள் | SI/03/2023 |

மேற்படி வழங்கல்களிற்காக தகைமையுள்ள நிறுவனங்கள் மற்றும் நபர்கள் இதற்காக விண்ணப்பிக்கலாமென்பதுடன் பொலிதின் குப்பை உறைகளிற்காக மீளளிக்கப்படாத ரூபா 6,500.00 இற்கான வைப்பொன்றை இலங்கை தேசிய வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவில் செலுத்தி 2023.04.17 முதல் 2023.05.16 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரை இலங்கை தேசிய வைத்தியசாலையின் வழங்கல் பிரிவில் உரிய நிபந்தனைகளுடன் கூடிய விலைமனு விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

2023.05.17 அன்று மு.ப. 10.00 இற்கு தேசிய வைத்தியசாலையின் பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும்.

**விஷேட வைத்தியர் டப்ளியூ. கே. விக்ரமசிங்ஹ,**
**தலைவர், பிராந்திய பெறுகைக்குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை.**

**அரச மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் பதவிகளுக்கு பெயர் குறிப்பிடப்பட்ட நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதி பற்றி ஆராய்வதற்கான இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு**

இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு பின்வரும் பதவிகள் தொடர்பாக நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதிகளை ஆராயும்:-

| இல | பெயர் மற்றும் விலாசம் | பதவி |
|---|---|---|
| 1 | திரு.கே.டி.என். ரஞ்சித் அசோக இலக்கம். 4-2-4, "நில பியஸ" ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை, கொழும்பு 7. | பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டவர் |
| 2 | திரு. சட்டத்தரணி அசேல பி ரெகவ இலக்கம். 61, மல் வீதி, கொழும்பு 07 | கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |
| 3 | டாக்டர். திரு. சி.சி.வை. அபேவர்தன இலக்கம். 21, ஆர்துசா ஒழுங்கை, கொழும்பு 06 | தேசிய லொத்தர் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |

மேலே நியமிக்கப்பட்ட ஆட்கள் தொடர்பில் எவரேனும் அல்லது எந்தவோர் அமைப்பும் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பினால் முறையாகக் கையொப்பமிட்டு, **"செயலாளர், உயர் பதவிகள் பற்றிய குழு, குழுப் பணியகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே"** என்ற விலாசத்திற்கு **2023 ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் இன்றேல் தொலைநகல் இல. 011-2777389 ஊடாக அல்லது highposts_c@parliament.lk எனும் மின்அஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

அவ்வெழுத்துமூல கருத்துக்களுக்கு மேலதிகமாக வாய்மூல கருத்துக்களையும் முன்வைக்குமாறு குழுவினால் பணிக்கப்படலாம். இந்த விளம்பரம் பாராளுமன்ற இணையத்தளத்திலும் இடம்பெற்றுள்ளது (www.parliament.lk)

**குழுச் செயலாளர்**
**பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.**

**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே.**
**2023 ஏப்ரல் 12 ஆம் திகதி**

Lanka Salt Ltd.

# பெறுகை அறிவித்தல்

**விலைக்கோரல் இல. LSL/ NCB/WIN/07/2023**

**லங்கா சோல்ட் லிமிடெட்டின் கீழ் உள்ள நிலப்பரப்பில் 50 MW அல்லது அதற்கு மேற்பட்ட கொள்ளளவுடைய காற்றாலை மின் உற்பத்தி பொறித்தொகுதியை நிறுவுவதற்கான முன்மொழிவுகளை அழைத்தல்**

குறித்த நிலப்பரப்பில் காற்றாலை மின் செயற்றிட்ட அபிவிருத்திக்காக இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபையில் (SLSEA) செல்லுபடியாகும் தற்காலிக ஒப்புதலைப் பெற்றுள்ள வளமுள்ள அபிவிருத்தியாளர்களிடமிருந்து லங்கா சோல்ட் லிமிடெட்டின் கீழ் உள்ள நிலப்பரப்பில் 50 MW அல்லது அதற்கு மேற்பட்ட கொள்ளளவுடைய காற்றாலை மின் உற்பத்தி பொறித்தொகுதியை நிறுவுவதற்கான முன்மொழிவுகள் அழைக்கப்படுகின்றன. காற்றாலை மின் பொறித்தொகுதியின் அபிவிருத்தியானது தேசிய கட்டத்துடன் இணைக்கப்படுவதற்கு 20 வருட கால செயற்பாட்டுக் காலத்துடன் கட்டமைக்கப்பட்டு, சொந்தமாக மற்றும் இயக்க அடிப்படையிலானதாக இருக்க வேண்டும்.

**அபிவிருத்தியாளர் செய்ய வேண்டியவை:**

- காற்றாலை மின் உற்பத்தி பொறித்தொகுதி அபிவிருத்தியில் லங்கா சோல்ட் லிமிடெட்டுடன் பங்குதாரராக இணைந்திருத்தல்
- காற்றாலை மின் உற்பத்தி பொறித்தொகுதி மற்றும் சகல இணை உபகரணங்கள்/ சேவைகளின் வடிவமைப்பு, நிதி, பெறுகை, நிர்மாணம், நடைமுறைப்படுத்தல், இயக்கம் மற்றும் பராமரிப்பு
- செயற்றிட்டத்திற்கு நிலப்பரப்பை பயன்படுத்துவற்கு லங்கா சோல்ட் லிமிடெட்டுடன் உடன்படிக்கையொன்றுக்கு வருதல்
- காற்றாலை மின் உற்பத்தி பொறித்தொகுதியின் மின் இணைப்பு, மின்மாற்றிகள், பாதுகாப்பு மற்றும் அளவீட்டு உபகரணங்கள் உட்பட கட்டம் ஒன்றோடொன்று இணைக்கப்படுவதற்கான முழுச் செலவையும் ஏற்றல்.
- சகல சுற்றாடல் அனுமதிகள், அரசாங்க ஒப்புதல்கள் மற்றும் சட்டபூர்வமான உரிமங்கள் ஆகியவற்றைப் பாதுகாத்தல்.

முன்மொழியப்பட்ட காற்றாலை மின் உற்பத்தி பொறித்தொகுதியிலிருந்து தேசிய மின் கட்டமைப்பிற்கு மின்சாரத்தை வழங்குவதற்கு இலங்கை மின்சார சபையுடன் (CEB) ஒரு மின்சார கொள்வனவு உடன்படிக்கைக்கு (PPA) வருதல் வேண்டும்.

மீளளிக்கப்படாத 35,000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்துதல் மற்றும் மீளளிக்கப்படாத கட்டணத்திற்கான பற்றுச்சீட்டு சகிதம் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றை 2023 மே மாதம் 03ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் சமர்ப்பித்தல் வேண்டும். ஹம்பாந்தோட்டை, மஹாலேவய, லங்கா சோல்ட் லிமிடெட் அல்லது நாவல, நாராஹேன்பிட்டி, சேவை செயலக அலுவலகத்திலிருந்து மேற்கூறப்பட்ட பொருட்களுக்கான விபரக்குறிப்புகள் உட்பட விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கொடுப்பனவுகளை ஹம்பாந்தோட்டை, மஹாலேவய, லங்கா சோல்ட் லிமிடெட், காசாளர் கருமபீடத்திற்கு அல்லது நாவல, சேவை செயலக அலுவலகத்திற்கு வேலை நாட்களில் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம். மேலும் ஹட்டன் நெஷனல் வங்கியின் 0680010003183 எனும் கணக்கிலக்கத்திற்கு லங்கா சோல்ட் லிமிடெட் பெயரில் வரவு வைக்கலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களை 2023 மே 04ஆம் திகதி பி.ப. 1.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபால் மூலம் லங்கா சோல்ட் லிமிடெட், இல. 44/5, நாராஹென்பிட்டி வீதி, நாவல எனும் முகவரியிலுள்ள சேவை செயலக அலுவலகத்திற்கு ஒப்படைத்தல் வேண்டும் அல்லது நாவல, இல. 44/5, நாராஹென்பிட்டி வீதி, லங்கா சோல்ட் லிமிடெட் சேவை செயலக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள ''04ஆம் இலக்க கேள்விப் பெட்டியில்'' உள்ளிடுதல் வேண்டும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விலைக்கோரல் இலக்கம் மற்றும் உருப்படியின் விபரம் என்பன குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். 2023 மே 04ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு முடிவுறுத்தல் நேரத்தில் பின் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும்.

- விலைமனுதாரர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் விலைமனுக்கள் திறக்கும் வேளையில் கலந்துகொள்ளலாம்.
- பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**லங்கா சோல்ட் லிமிடெட்,**
**மஹாலேவய, ஹம்பாந்தோட்டை,**
**இலங்கை.**

**+94 47 2221279, +94 47 2037330**
**பொது இலக்கம்: 047-2220208**
**தொலைநகல்: 047-2220340**
**மின்னஞ்சல்: ceo@lankasalt.lk**

## பெயர் மாற்றம்

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 301 பாடசாலை வீதி, ஓட்டமாவடி 02 எனும் விலாசத்தில் வசிக்கும் மஹ்றூப் தஸ்லீம் ஆகிய நான் அறியத்தருவதாவது எனது, பெயர் தஸ்லீம் ஆனால் எனது பிறப்பு பதிவில் தாஸ்லீம் என்று உள்ளது எனது சகல ஆவணங்களிலும் தஸ்லீம் என்று உள்ளதால் எனது பிறப்புப் பதிவில் தஸ்லீம் என்று மாற்றம் செய்யவுள்ளேன் என்று இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசுக்கும் நாட்டு மக்களுக்கும் அறியத்தருகிறேன்.

**மஹ்றூப் தஸ்லீம்**

## பெயர் மாற்றம்

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் ஹுதா பள்ளிவாயல் வீதி, பிறைந்துரைச்சேனை, வாழைச்சேனை எனும் விலாசத்தில் வசிக்கும் முஹம்மது யூசுப் ஜனுபா ஆகிய நான் அறியத்தருவதாவது எனது பெயர் ஜனுபா ஆனால் எனது பிறப்பு பதிவில் யூசுப் ஜனுபா என்று உள்ளது எனது சகல ஆவணங்களிலும் ஜனுபா என்று உள்ளதால் எனது பிறப்புப் பதிவில் ஜனுபா என்று மாற்றம் செய்யவுள்ளேன் என்று இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசுக்கும் நாட்டு மக்களுக்கும் அறியத்தருகிறேன்.

**முஹம்மது யூசுப் ஜனுபா**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

සියපත ෆිනෑන්ස්
சியபத பினான்ஸ்
Siyapatha Finance
(Finance Company of Sampath Bank Group)

**மீட்கப்படாத தங்க நகைகளை ஏலத்தில் விற்பனை செய்தல்**

சியபத பினான்ஸின் கீழ்க்காணும் கிளை மத்தியஸ்தானங்களில் 2022 டிசம்பர் 31ம் திகதி வரை அடகுவைக்கப்பட்டு இதுவரை மீட்கபடாத தங்க நகைகள் கீழ்க்குறிப்பிட்ட திகதியில் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலவிற்பனை 2023 ஏப்ரல் 27ம் திகதி மு.ப 9.30க்கு நடைபெறும்.

| கிளை / மத்தியஸ்தானம் | மீட்கப்பட வேண்டிய கால எல்லை | ஏலவிற்பனை நடைபெறும் இடம் |
|---|---|---|
| கண்டி-கட்டுகஸ்தோட்ட, மாத்தறை, அம்பாறை, நுவரெலிய, நீர்க்கொழும்பு, குருணாகலை, பேலியகொட, நுகேகொட, சாய்ந்தமருது, அநுராதபுரம், இரத்தினபுரி, கேகாலை, குளியாபிட்டிய, வவுனியா, குருணாகலை-நகர், கண்டி - கந்த வீதிஇ, கல்முனை, அவிஸ்சாவெல்ல, மட்டக்களப்பு, கம்பஹா, களுத்தறை, திருகோணமலை, வெள்ளவத்தை, காலி, பாணதுறை, கிரிபத்கொட, மஹரகம, வத்தளை, ஹட்டன், பிலியந்தல, சிலாபம், மொரட்டுவ, புறக்கோட்டை, யாழ்ப்பாணம், கொஹுவல நிட்டம்புவ, மாலபே, மாத்தளை, தம்புள்ளை, நவம் மாவத்தை, பொலன்னறுவை மற்றும் கிளிநொச்சி | 2022 டிசம்பர் 31ம் திகதிக்கு முன் மீட்கபடாத தங்க நகைகள் | சியபத பினான்ஸ், தலைமை காரியாலயம், இல 111, டட்லி சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 08 |

ஏலவிற்பனையை நிராகரித்தல், பிற்போடுதல் மற்றும் வேறொரு கிளையுடன் ஒன்றிணைந்து நடாத்துதல் ஆகிய உரிமைகள் சியபத பினான்ஸ் பி.எல்.சி வசம் உள்ளன.

பதிவு இலக்கம்: PB 917PQ

தலைமை அதிகாரி
சியபத பினான்ஸ் பீஎல்சீ
இல 111, டட்லி சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 08


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கட்கிழமை 2023.04.10
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 5086
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 15,415,856.00
ஆங்கில எழுத்து: Y
வெற்றி இலக்கங்கள்: 4 1 5 5 6 7

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 1541
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 12,052,291.60
வெற்றி இலக்கினம்: சிம்மம்
வெற்றி இலக்கங்கள்: 7 9 8 7 5 1

**ராசி சுப பலன்**
Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 395
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 2,500,000.00
வெற்றி இலக்கினம்: ரிஷபம்
வெற்றி இலக்கங்கள்: 18 30 33 46
விசேட இலக்கினம்: ரிஷபம்

**மெகா பவர்**
சீட்டிழுப்பு இலக்கம்: 1434
அடுத்த மெகா சுப்பர் பரிசு: ரூ. 314,298,178.00
ஆங்கில எழுத்து: E
சுப்பர் இலக்கம்: 08
வெற்றி இலக்கங்கள்: 02 30 65 69
அடுத்த பவர் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00

**கொவிசெத**
Govisetha
சீட்டிழுப்பு இலக்கம்: 3328
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 96,013,137.44
ஆங்கில எழுத்து: J
வெற்றி இலக்கங்கள்: 03 23 24 70

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம்: 1116
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 85,871,990.80
ஆங்கில எழுத்து: H
வெற்றி இலக்கங்கள்: 05 10 24 43

# வேகமாக பரவும் காய்ச்சல் இதுவரை 15 பேர் மரணம்

நாடு முழுவதும் இன்புளுவன்சா காய்ச்சல் மீண்டும் வேகமாக பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கர்ப்பிணிப் பெண்கள், சிறு குழந்தைகள் மற்றும் வயதானவர்கள் சுவாசப் பிரச்சினை உள்ளவர்கள் இந்த நோயால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

அதிக காய்ச்சல், தசைவலி, மூக்கில் நீர் வடிதல், தொண்டை புண் மற்றும் சளி போன்றவை இதன் அடிப்படை அறிகுறிகளாகுமென விசேட வைத்தியர் பிரியங்கர ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, காலி மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. இந்த வருடத்தின் கடந்த மூன்றரை மாதங்களில் எலிக்காய்ச்சல் காரணமாக 15 பேர் உயிரிழந்துள்ளதாக காலி மாவட்ட தொற்றுநோய் நிபுணர் எரந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

# பால் மா விலை மேலும் குறையும் சாத்தியம்



பால் மாவின் விலை எதிர்வரும் மாதங்களில் மேலும் குறைவடையுமென, பால் மா இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது. கடந்த வாரம் பால் மாவின் விலையில் திருத்தம் செய்யப்பட்டது.

இதன்படி, இறக்குமதி செய்யப்படும் 400 கிராம் பால் மா பக்கற்றின் விலை 80 ரூபாவால் குறைக்கப்பட்டது. இறக்குமதி செய்யப்படும் 400 கிராம் பால் மா பக்கற் ஒன்று ஆயிரத்து 120 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. அத்துடன் 3,100 ரூபாவாக இருந்த ஒரு கிலோ கிராம் பால் மா பக்கற் விலை 200 ரூபாவால் குறைக்கப்பட்டு 02 ஆயிரத்து 900 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

எவ்வாறாயினும், எதிர்வரும் ஜூன் மாதமளவில் மேலும் பால் மா விலை குறைவடையக்கூடுமென பால் மா இறக்குமதியாளர்கள் சங்கத்தின் அங்கத்தவர் லக்ஷ்மன் வீரசூரிய தெரிவித்துள்ளார்.




# இறுதிப்பத்தின் மகத்துவம்

இறை அருளின் பிரதிபலன்களில் ஒன்றாக தற்போது நாம் இவ்வருட ரமழானின் இறுதிப்பத்து நாட்களை அடைந்து கொண்டுள்ளோம். இது ரமழானின் மகத்தான காலப்பகுதியாகும். ரமழானின் இறுதி பத்து தினங்களில் உள்ள ஒற்றைப்படையான ஒரு இரவில்தான் 'லைலதுல் கத்ர்' என்ற மகத்தான இரவு அமைந்திருக்கிறது. அது ஆயிரம் மாதங்களைவிட மேலானது. (கத்ர் 03)

அதாவது அந்த தினத்தில் ஆற்றப்படுகின்ற நல்ல காரியங்களுக்கு ஆயிரம் மாதங்களின் அந்தஸ்து கிடைக்கப்பெறுகிறது.

இத்தகைய 'லைலதுல் கத்ர்' தினத்தில்தான் மனித குலத்துக்கு நேர்வழியை காட்டக்கூடிய அல்குர்ஆன் அருளப்பட்டது. 'நிச்சயமாக நாம் இந்தக் குர்ஆனை லைலதுல் கத்ர் இரவில் இறக்கி வைத்தோம்' (கத்ர் 01)

இது அருள்பாளிக்கப்பட்ட இரவு. 'நிச்சயமாக நாம் அல்குர்ஆனை அருள்நிறைந்த இரவில் இறக்கிவைத்தோம்' (துகான் 03) இந்த இரவில் அதிகமான மலக்குகள் பூமிக்கு இறங்கி வருகிறார்கள். இது சாந்தியும் அருள்களும் நிறைந்த இரவாக இருக்கும்.

இது அந்த வருடத்துக்கான விடயங்கள் தீர்மானிக்கப்படுகின்ற இரவாகவும் உள்ளது. 'இவ்விரவில் முக்கியமான விடயங்கள் தீர்மானிக்கப்படுகின்றன (துகான் 04)

ஈமானுடனும், அல்லாஹ் நன்மைகளை தருவான் என்ற நல்லெண்ணத்துடனும் லைலதுல் கத்ர் இரவில் நின்று வணங்குவது பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு காரணமாய் அமையும். (ஆதாரம் புஹாரி) இப்படியாக இதன் சிறப்புகளை கூறிச் செல்லலாம்.

இத்தகைய நன்மைகளை அடைந்துகொள்வதற்காக நபி (ஸல்) அவர்கள் இறுதிப்பத்தில் பெரும் பிரயத்தனம் செய்துள்ளார்கள் என்று ஆயிஷா ரழி அவர்கள் அறிவித்துள்ளார்கள் (ஆதாரம் முஸ்லிம்).

இரவை உயிர்ப்பிப்பார்கள். தனது குடும்பத்தவர்களையும் எழுப்பிவிடுவார்கள். ஆடையை வரிந்துகட்டிக் கொண்டுசெயற்படுவார்கள். இதற்காக பள்ளியில் (இஃதிகாப்) தரித்திருப்பார்கள். இத்தகைய மகத்தான இரவை ரமழான் மாதத்தின் இறுதிப்பத்தில் ஒற்றைப்படையான இரவுகளில் தேடிக்கொள்ளுங்கள் (ஆதாரம் புஹாரி, முஸ்லிம்) என்றும் அன்னார் குறிப்பிட்டார்கள்.

ஆகவே, ரமழான் இறுதிப் பத்து நாட்கள் தாங்கியுள்ள நன்மைகளையும் அருள்களையும் அடைந்து கொள்ள இத்தினங்களை உச்சளவில் பயன்படுத்திக் கொள்ளோம்.

அஷ் ஷெய்க்
யூ.கே றமீஸ்...
எம்.ஏ. (சமூகவியல்)

# போலி நாணயத்தாள்களை சந்தைக்குள் புகுத்த முயற்சி

## அவதானத்துடன் செயற்படுமாறு எச்சரிக்கை



பண்டிகைக் காலங்களில் போலி நாணயத்தாள்கள் புழக்கத்திற்கு வருவதால், கடைகளுக்குச் செல்லும் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென பொலிஸார் கோரியுள்ளனர்.

பண்டிகைக் காலங்களில், போலி நாணயத்தாள்களை சந்தைப் புழக்கத்தில் விடுவதற்கு மோசடியாளர்கள் முயற்சிப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவா தெரிவித்துள்ளார். இதுகுறித்து பொலிஸ் நிலையங்களில் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் செய்யப்படுகின்றன. எனவே, அவதானமாக இருக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

பணத்தை மாற்றும் போதும் மீதிப்பணம் பெறும் போது மிகவும் அவதானத்துடன் அதனை கையாள வேண்டும். பெண்கள் தனியாக செல்லும் போது அதிக நகைகள் மற்றும் பெறுமதியான பொருட்களுடன் செல்வதனை தவிர்ப்பது நல்லது.

பஸ்களில் பணப் பைகளை வெட்டி எடுக்கும் போக்கு அதிகரித்துள்ளதால் எச்சரிக்கையாக இருக்குமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கடவுச்சீட்டு விண்ணப்பங்களை கையளிக்க கால அவகாசம்

கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்வதற்காக இன்று புதன்கிழமை (12) நேரம் வழங்கப்பட்டுள்ள சகல சேவை பெறுநர்களையும் நண்பகல் 12 மணிக்கு முன்னதாக தமது விண்ணப்பங்களை கையளிக்குமாறு குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

தமிழ் சிங்கள சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு 13 மற்றும் 14 ஆம் திகதிகள் அரச விடுமுறையாக உள்ளதாலே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இன்று (12) நண்பகல் 12 மணிக்கு பின்னர் நேரம் ஒதுக்கிக் கொண்டவர்கள் உட்பட அனைவரும் அதற்கு முன்னரே வருகை தந்து விண்ணப்பங்களை சமர்ப்பித்துச் செல்லுமாறு குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் ஐ.எஸ்.எச்.ஜே. இழுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

## எல்ல ரயில் நிலைய பகுதியை...

அமைந்துள்ள குன்றுப் பகுதியில் பெரும் காணிப்பிரதேசம் காணப்படுகிறது. நேற்று முன்தினம் அங்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன, மேற்படி அபிவிருத்தி திட்டம் தொடர்பில் அமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளார்.

அதற்கிணங்க அப்பகுதியில் 500 அல்லது 1,000 வீடுகளை உள்ளடக்கிய மாடி வீட்டுத் திட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

அந்தத் திட்டத்திற்கான முதலீடுகளை மேற்கொள்வதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முன் வந்தால் அது அப்பகுதியின் பெரும் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

எல்ல மற்றும் அதனை அண்டிய வெல்லவாய பிரதேசங்கள் மிகுந்த எழில் மிகுந்த பகுதியாக காட்சியளிக்கின்றன. அவ்வாறு அப்பகுதியில் நிர்மாணிக்கப்படும் மாடி வீடுகளை இலகுவாக விற்பனை செய்யவும் முடியும். ஏனென்றால் கொழும்பிலிருந்தும் நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்தும் அங்கு வந்து செல்லும் வசதி படைத்தவர்கள் தங்களுக்கான இரண்டாவது வீடாக அங்குள்ள மாடி வீட்டை கொள்வனவு செய்வதற்கு வாய்ப்புகள் உள்ளன. அவ்வாறு வீடுகளை கொள்வனவு செய்வோர் தமது விடுமுறை காலத்தில் அங்கு வருகை தந்து நாட்களை சிறப்பாக கழிக்க முடியும். ஏனைய காலங்களில் அந்த வீடுகளை சுற்றுலாப் பயணிகளுக்கு வாடகைக்கு விடுவதன் மூலம் வருமானத்தை ஈட்டிக் கொள்ளவும் முடியும்.

அத்தகைய மாடி வீடுகள் நிர்மாணிக்கப்படும் போது அதன் கீழ் தட்டில் உள்ள வீடுகள் சிலவற்றை ரயில்வே துறைக்கு வழங்குவது பற்றியும் ரயில் நிலைய அதிபர்களுக்கு அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

## மரண தண்டனை கைதிகளுக்கு...

சிறைச்சாலைகளில் தற்போது 26 ஆயிரம் சிறைக்கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் அவர்களில் 8000 பேர், குற்றவாளிகளாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தால் பெற்றுக் கொடுக்கப்படும் வசதிகளுக்கு மேலதிகமாக சிறைக்கைதிகளுக்கு, தேவையான நலன்புரி வசதிகளை வழங்குவதற்கு விசேட குழுக்கள் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அவசியமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நீதியமைச்சில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்துள்ள அமைச்சர், 1934ம் ஆண்டுக்குப் பின்னர், முதல் தடவையாக மனிதாபிமான நோக்கில் சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மரண தண்டனை பெற்று, சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளுக்குள்ளேயே இதற்கான இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சிறு குற்றங்கள் புரிந்துள்ள நபர்களை வீடுகளிலேயே தடுப்புக்காவலில் வைப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான சட்டமொன்றை தயாரிப்பதற்கு குழுவொன்றை நியமித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## நாட்டுக்கு தேவையான புதிய...

பற்றிக் குறிப்பிட்ட ஜனாதிபதி, நான்கு வருடங்களுக்குள் ஸ்திரமான பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும். இதற்கான பிரதான வேலைத்திட்டங்கள் நுவரெலியாவை மையமாகக் கொண்டு முன்னெடுக்கப்படும். பிரதான சுற்றுலா நகரமான நுவரெலியாவின் அதிகபட்ச பங்களிப்பை பெற்றே இவ்வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாதென பலர் நினைக்கின்றனர். சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் செய்துள்ள ஒப்பந்தமூடாக நாட்டை கட்டியெழுப்பலாமென்ற புதிய எதிர்பார்ப்புக்கள் தோன்றியுள்ளன.

நுவரெலியா மாவட்டத்தை நோக்கி வரும் சுற்றுலாப் பிரயாணிகளை இலக்கு வைத்து, இவ்வருகையை அதிகரிக்கும் கண்கவர் நகரமாக நுவரெலியாவை அபிவிருத்தி செய்ய வேண்டும். சுற்றுலாத்துறையின் தேவைப்பாடுகளை அறிந்துகொண்டு புதிய திட்டங்களை வகுக்க வேண்டியது அவசியமாகும். உயர் கட்டடங்களுக்கு மாறாக ஓய்வெடுக்கக்கூடிய வகையிலான ரம்மியமான சூழலுடல் அபிவிருத்தி திட்டங்களை தயாரிக்க வேண்டும். நுவரெலியா நகரத்துக்குள் மழைநீர் வழிந்தோடுவதற்கு அவசியமான வேலைத்திட்டம் ஒன்று இல்லாமை நீண்டகால பிரச்சினையாக உள்ளது. அதற்கு தீர்வு காண்பதற்கான வேலைத்திட்டத்தை விரைந்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

2025 ஆம் ஆண்டு இலக்கு வைத்துள்ள அபிவிருத்தித் திட்டத்தில் வெற்றியீட்டுவதற்கு அனைத்துத் தரப்பினரின் பங்களிப்பையும் பெறுவதே எமது எதிர்பார்ப்பாகும் என்றார்.

## சுற்றுப் பயணங்கள்...

வேண்டாமென பொலிஸார் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இக்காலப்பகுதியில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் திருட்டு மற்றும் வீடுகளுக்குள் புகுந்து திருடுவதற்கு இவ்வாறான தகவல்களை பயன்படுத்தலாமெனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இதை, முன்கூட்டிப்பாதுகாப்பதற்கே தகவல்களை சமூக ஊடகங்களில் பகிர வேண்டாமென கோரப்பட்டுள்ளது. அதேநேரம் வீடுகளை விட்டு வெளியே வருபவர்கள் சிசிடிவி கருவிகளை இயக்கவும், கொள்ளை சம்பவங்களைத் தடுக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

## உணவு சட்டங்களை மீறிய...

பண்டிகைக் காலங்களில் உணவு விற்பனை நிலையங்களை இலக்காகக் கொண்டு கடந்த மார்ச் (02) முதல் சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப் பட்டன. இதன்போது, உணவுச்சட்டங்களை மீறிய மூவாயிரம் உணவகங்கள் குறித்து தெரிய வந்தது.

இவற்றுக்கு எதிராகவே நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன. மேலும், இம்மாத இறுதிவரை சுற்றிவளைப் புக்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் எனவும் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், பண்டிகைக் காலங்களை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்படும் உணவுகள் அதற்காக பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் குறிப்பாக இக் காலங்களில் விற்பனை செய்யப்படும் பலகாரங்கள் மற்றும் பழங்கள் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் மக்கள் அதிகளவு பொருட்களை கொள்வனவு செய்யும் விற்பனை நிலையங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஏப்ரல் 10ம் திகதி வரையான காலத்தில் 19,107 வர்த்தக நிலையங்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன. அவற்றில் 3102 நிலையங்கள் உணவு சட்டத்தை மீறியுள்ளதால், அந்நிறுவனங்களுக்கு எதிராக வழங்கு தொடரப்பட்டுள்ளது.

அதேவேளை, இக்காலங்களில் உணவுப் பொருட்களை கொள்வனவு செய்யும் நுகர்வோர், அது தொடர்பில் அதிக கவனம் செலுத்துவது அவசியமாகும். முறைப்பாடுகள் இருப்பின் 011 2 635675 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு தமது விரைவான சேவையை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நீர் கட்டணம் செலுத்தாத...

தவறியுள்ளதாக வடிகாலமைப்பு சபை குறிப்பிடுகிறது. பொலிஸ் நிலையங்கள், இராணுவ முகாம்கள் மற்றும் வைத்தியசாலைகள் ஆகியவை நீண்ட காலமாக நீர்க் கட்டணத்தை செலுத்த தவறிய அரச நிறுவனங்களாக கண்டறியப்பட்டுள்ளன. கடந்த ஜனவரி மாதம் முதல் இந்த மேலதிக கட்டணம் அறவிடப்படுவது குறித்து, சகல அரச நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டதாக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை உயர் அதிகாரியொருவர் குறிப்பிட்டார். பொதுவாக, நீர் கட்டணம் 90 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், இந்த மேலதிக கட்டணம் அறவிடப்படும். மேலும், நீர் கட்டணத்தை 14 நாட்களுக்குள் செலுத்தினால், 1.5 சதவீதம் தள்ளுபடி வழங்கப்படும் என்று கூறிய அதிகாரி, இந்த தள்ளுபடியானது சகல பாவனையாளர்களுக்கும் வழங்கப்படுகின்ற ஓர் விடயமாகும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## வங்கி ATM அட்டைகள்...

பிலியந்தலை, கொட்டாவ, தெஹிவளை, மிரிஹான மற்றும் மஹரகம ஆகிய பொலிஸ் நிலையங்களில் ஐம்பது முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதையடுத்து, நுகேகொடை பிரதேச குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணைகளின்படி இச்சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பிலியந்தலை பகுதியைச் சேர்ந்த 24 வயதுடையவரென அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ஏ.ரி.எம். இயந்திரங்களில் பணம் எடுக்க வரும் சிலருக்கு உதவி செய்வதாகக் கூறி இரகசிய இலக்கத்தை சந்தேகநபர் பெற்றுக் கொண்டதாகவும், அச்சமயம் இயந்திரத்தில் இருந்த பணத்தை பெற்றுக்கொண்டு போலி அட்டையை அவர்களிடம் கொடுத்து அனுப்புவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதன் பின்னர் சந்தேகநபர் உண்மையான அட்டையைப் பயன்படுத்தி மோசடியான முறையில் பணத்தை திருடிச் சென்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சந்தேகநபர் (11) நுகேகொட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மிரிஹான பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## எல்லை நிர்ணய ஆணைக்குழுவின்...

8,000 பேருக்கும் அதிகமாக காணப்பட்ட மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் ஆகியவற்றை உள்ளடக்கும் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களது எண்ணிக்கை, எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் புதிய அறிக்கையின்படி அரைவாசியாக குறைக்கப்பட்டுள்ளது.

புதிய எல்லை நிர்ணய அறிக்கை கையளிக்கப்பட்டதன் பின்னர் உள்ளூராட்சி சபை தேர்தலுக்காக தற்போது வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களின் வேட்புமனு இரத்துச் செய்யப்படுமா? என ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவிடம் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், பாராளுமன்ற சட்டமொன்றின் மூலம் அன்றி அவற்றை இரத்துச் செய்ய முடியாதென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொகுதிகளுக்கான எல்லைகள், மற்றும் மக்கள் எண்ணிக்கை தொடர்பில் இந்த அடிப்படை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதனை விரைவில் மாவட்டச் செயலாளர்கள், அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும் அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது அந்த அறிக்கையில் உள்ளடக்குவதற்கான சமயத் தலைவர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளின் யோசனைகளும் கிடைக்கப் பெற்றுள்ளதாக அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையை தயாரிப்பதற்கான காலம் எதிர்வரும் ஏப்ரல் 30 ஆம் திகதி வரை வழங்கப்பட்டுள்ள நிலையில் அந்த அறிக்கையில் உள்ளடக்கப்படுவதற்காக கிடைக்கப் பெறும் யோசனைகள் தொடர்பில் அதுவரை கவனத்திற் கொள்ளப் படுமென்றும் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவின் தலைமையிலான மேற்படி குழுவில் ஜயலத், ஆர்.வீ.திசாநாயக்க, டபிள்யூ. எம். எம். ஆர். அதிகாரி, க.தவலிங்கம் மற்றும் ஐ. ஏ. ஹமீட் ஆகியோரும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத் தக்கது.

பிரதமரின் அலுவலகத்தில் வைத்து நேற்று அந்த அறிக்கை பிரதமரிடம் கையளிக்கப்பட்டதுடன் அந்த நிகழ்வில் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், உள்ளூராட்சி சபை அமைச்சின் செயலாளர் கே. டி .என் .ரஞ்சித் அசோக்க மற்றும் எல்லை நிர்ணய

ஆணைக்குழுவின் உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

Capital trust
Capital TRUST Research (Pvt) Ltd
A Capital TRUST Group Company
42, Sir Mohammed Macan Markar Mawatha, Colombo 3.
Hotline: 0705 666 777
WhatsApp: 0777 233 633

## Stock Market commenced to gather momentum...

Daily Market Watch
11th April 2023

### Market Commentary

The stock market commenced to gather momentum with popular stocks such as LIOC rising 5.7% and Expo Lanka rising by 3.7% which provided a catalyst for the overall market. Tokyo Cement (Non-Voting) attracted foreign buying with over 3.9 million shares traded. It is anticipated that with the ending of the holidays, more funds will enter the market. Popular shares rising on higher volumes indicate positive stock market sentiment. Meanwhile, Treasury Bill rates inched up at yesterday's auction, with the 12 Month T-Bill rate rising by a modest 0.27%. Not much foreign participation at this week's auction as most foreign funds are on Easter break.


### T bill Auction Summary

[illegible]


### Market Performance

| | 11.04.2023 | 10.04.2023 | %Chg. |
|---|---|---|---|
| All Share Price Index | 9,411.7 | 9,322.9 | 0.95 |
| S&P SL 20 Index | 2,769.6 | 2,728.0 | 1.52 |
| Turnover (LKR mn) | 1,673.6 | 1,296.9 | 29.0 |
| Foreign Purchases (LKR mn) | 193.5 | 52.2 | 270.4 |
| Foreign Sales (LKR mn) | 160.3 | 6.0 | 2577.0 |
| Market Cap (LKR bn) | 4,008.9 | 3,953.6 | 1.4 |
| Market Cap (US$ bn) | 12.5 | 12.4 | 1.4 |
| Traded Companies | 244 | 251 | -2.8 |
| Market PER (x) | 5.2 | 5.1 | 1.4 |
| Price to Book (x) | 1.0 | 0.9 | 1.1 |
| Dividend Yield (%) | 3.9 | 4.0 | -1.3 |


### Relative Strength Index (RSI)




### Contributors to ASPI





### Turnover Breakdown




### Key Rates

| | 11.04.2023 |
|---|---|
| Prime Lending Rate (Avg. Weighted) | 22.63% |
| Fixed Deposit Rate (Avg. Weighted) | 19.80% |
| Treasury Bill Rate (364 Days) | 22.64% |
| Consumer Price Inflation - CCPI (YoY % change) | 50.30% |

### Market Benchmarks




### Largest Trades




### Corporate News

CASH DIVIDENDS

Sri Lanka Telecom PLC (SLTL) - LKR 0.25. XD date – 12.05.2023.

Talawakelle Tea Estates PLC (TPLN) - LKR 17.35. XD date – 20.04.2023.

First Capital Holdings PLC (CFVF) - LKR 2.25. XD date – 19.04.2023.

Ceylinco Insurance PLC (CINS) - LKR 45.00. XD date – 29.05.2023.

First Capital Treasuries PLC (FCT) - LKR 1.50. XD date – 17.04.2023.Ceylon Tobacco Company PLC (CTC) - LKR 20.30. XD date – 29.05.2023.

United Motors Lanka PLC (UML) - LKR 1.00. XD date – 02.05.2023.

Overseas Realty (Ceylon) PLC (OSEA) - LKR 1.25. XD date – 27.04.2023.

Nestle Lanka PLC (NEST) - LKR 75 .00. XD date – 06.06.2023

*Disclaimer - The information contained in this material has not been independently verified. No representation or warranty express or implied is made as to, and no reliance should be placed on, the fairness, accuracy, completeness or correctness of the information or opinions contained herein and nothing in this presentation is, or shall be relied upon as, a promise or representation by the Company.*

## இலங்கையில் தளம் அமைக்கும்...

இராணுவத் தளத்தை அமைக்கும் நோக்கம் அமெரிக்காவுக்கு கிடையாது என்பதை மீண்டும் வலியுறுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் SOFA உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கோ அல்லது மீளாய்வு செய்வதற்கோ அமெரிக்காவுக்கு எந்த எண்ணமும் கிடையாது என்பதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கியுள்ள நேர்காணலிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் பாதுகாப்புத் துறை உயர் அதிகாரி ஜெடிடியா றோயல் தலைமையிலான உயர் பாதுகாப்புக் குழுவொன்று, கடந்த பெப்ரவரியில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தது. அது தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ள அவர், பிராந்திய பாதுகாப்பு, இலங்கை இராணுவத்தில் மேற்கொள்ள வேண்டிய அரசியலமைப்பு மற்றும் கடல்சார் விழிப்புணர்வு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்காகவே மேற்படி அதிகாரிகள் குழு இலங்கைக்கு வருகை தந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அரச நிறுவனங்கள்... (03 ஆம் பக்கத் தொடர்)

ஏற்படுத்துவதே எமது பிரதான நோக்கமாகும். தேயிலை உற்பத்தி நிறுவனங்களுக்கு குறைந்த விலையில் எரிபொருளை கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பை பெற்றுத்தருமாறு வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

தற்போதுள்ள அரசாங்கத்தின் ஏகாதிபத்திய நிலையை உடைத்து போட்டித் தன்மையை ஏற்படுத்தி, அதன்மூலமான இலாபத்தை மக்களுக்கு வழங்குவதே அரசாங்கத்தின் நோக்கமாகும். அந்த வகையில் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பு செய்வது சிறந்த நடவடிக்கை என்பதை எம்மால் உறுதிப்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# 12ஆவது அகவையை பூர்த்தி செய்யும் வெள்ளவத்தை மஹானயீம் நற்செய்தி சபை



இன்று நன்றி செலுத்தும் விசேட ஆராதனை

வெள்ளவத்தை மஹானயீம் நற்செய்தி சபையின் 12ஆவது அகவையை பூர்த்தி செய்வதோடு இன்று 13 ஆவது அகவையில் கால்பதிக்கின்றது. இதனையொட்டி இன்று (12) நன்றி செலுத்தும் சிறப்பாராதனை வெகு விமரிசையாக நடைபெறுகின்றது.

ஆன்மீக பணிகளோடும், சமூக பணிகளையும் முன்னெடுத்துச் செல்லும் மேற்படி நற்செய்தி சபையின் மூலம் நூற்றுக்கணக்கான மக்களை வழி நடத்தும் பாரிய நற்பணியை செய்து வருகின்றது. சகல மக்களும் சுபிட்சமாக இந்த நாட்டில் வாழ வேண்டும் என்பதிலும் மதம் இனப்பாகுபாடு அற்ற நாடாக இலங்கை திகழவேண்டும் என பிரார்த்தனை மூலம் நாடு ஜெயம் பெறும். இந்த 2023 ஆம் ஆண்டின் புத்தாண்டு பிறக்கும் தருணத்தில் மக்கள் கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள வேண்டும். அண்மை காலங்களில் தாம் மேற்கொண்ட பிரார்த்தனைகள் வீண்போகவில்லை.

13 ஆவது அகவையில் கால்பதிக்கும் எமது சபை மக்களுக்கு அறிவிக்கும் நற்செய்தி என்னவென்றால், இறைவன் மீது நம்பிக்கை வையுங்கள் அப்போதுதான் தம்மை நெருங்குகின்ற அழிவுகளிலிருந்து பாதுகாப்பு பெற முடியும்.

இன்று காலை 9 மணிக்கு எமது ஆலயத்தில் நடைபெறும் நன்றி செலுத்தும் ஆராதனையில் கலந்து கொள்ளவும். மஹானயீம் நற்செய்தி சபை 2023 ஆம் ஆண்டு சகல ஆசீர்வாதங்களையும் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் கொண்டுவர பிரார்த்திக்கின்றது. தலைமை போதகர் சந்தனம் சந்திரன் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களும் இணைந்து தமது நல்வாழ்த்துக்களை தெரிவிக்கின்றார்கள். இயேசு கிறிஸ்து உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.













தேவதாஸ் சவரிமுத்து
சிரேஷ்ட ஊடக இணைப்பாளர்

வெடுக்குநாறி, குருந்தூர் மலை விவகாரம்;

## இந்திய உயர் ஸ்தானிகருடன் ஆலய நிர்வாகத்தினர் பேச்சு

வவுனியா விசேட நிருபர்

வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயம் மற்றும் குருந்தூர் மலை விவகாரம் தொடர்பில் இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லேவுடன் ஆலய நிர்வாகத்தினர் பேச்சு நடத்தியுள்ளனர்.

கொழும்பில் அமைந்துள்ள இந்திய தூதரகத்தில் நேற்று முன்தினம் (10) மாலை இச் சந்திப்பு சுமார் ஒரு மணி நேரம் வரை நடைபெற்றது.

இச் சந்திப்பில் இந்து மாமன்றத்தின் தலைவர், இந்து மாமன்றத்தின் பொருளாளர், திருக்கேதீஸ்வர ஆலயத்தின் தலைவர் மற்றும் வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலய நிர்வாகத்தினர் உள்ளிட்ட 8 பேர் கலந்து கொண்டனர்.

இதன்போது, குருந்தூர் மலையில் சைவ சமய வழிபாடுகள் நீக்கப்பட்டு நீதிமன்ற உத்தரவை மீறி புத்தர் விகாரை நிறுவப்பட்ட விடயம் தொடர்பிலும், அதனைத் தொடர்ந்து வவுனியா, நெடுங்கேணி வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் தொடர்ந்தும் இடம்பெற்று வரும் சம்பவங்கள் தொடர்பில் இந்திய துணைத் தூதருக்கு தெளிவுப்படுத்தப்பட்டதுடன், எல்லையோரக் கிராமங்களில் இடம்பெறும் பௌத்தமயமாக்கல் மற்றும் சிங்கள குடியேற்றங்களின் விஸ்தரிப்பு தொடர்பிலும் சுட்டிக் காட்டியதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

அத்துடன், வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலய வழிபாடுகள் மற்றும் தொடர்ச்சியாக தொல்பொருள் திணைக்களம், பொலிசார் ஊடாக ஏற்படுத்தப்பட்டு வரும் அச்சுறுத்தல் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

இவை தொடர்பில் கவனம் செலுத்திய இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே, இவை தொடர்பில் உரியவர்களுடன் பேசி தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதியளித்தார்.

அதனைத் தொடர்ந்து ஆலய நிர்வாகத்தினர், பௌத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவையும் சந்தித்து வெடுக்குநாறி மலை ஆலய விடயம் தொடர்பில் பேசினார். இதன்போது, நீதிமன்ற வழக்கு முடியும் வரை இவ் விடயத்தில் தலையிட முடியாது என அமைச்சர் தெரிவித்ததாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.



கிளிநொச்சி ரோட்டரிக் கழகம்,காவேரிக் கலா மன்றத்தின் அனுசரணையில் சித்திரை புத்தாண்டு கலைவிழா மற்றும் திருவள்ளுவர் நூலக திறப்பு விழா எஹலியகொட தமிழ் வித்தியாலயத்தில் நேற்று 9 மணிக்கு நடைபெற்றது.இரு பெரும் விழாவுக்கு பிரதம அதிதியாக ஜெனிபர் ஸ்மித்(ஓய்வு நிலை நீதிபதி பிரித்தானியா) கலந்து கொண்டதோடு கிளிநொச்சி நகர ரோட்டரிக் கழகத் தலைவர் மற்றும் காவேரிக் கலா மன்ற தலைவருமான வண.ஜோசுவா அடிகளார்,செயற்றிட்ட தலைவர் அதிபர் அ. பங்கையற்செல்வன், கஜேந்திரகுமார், எழுத்தாளர் கவிஞர் கருணாகரன் ஆகியோருடன் எஹலியகொட தமிழ் வித்தியாலய அதிபர் R.தெய்வராஜா ஆகியோர் பங்கேற்றனர்.

படங்கள் – இக்பால் அலி

வடக்கின் உதயம்

## யானைவேலி மின்சாரத்தில் அகப்பட்டு இளைஞன் பலி

### வவுனியா வடக்கில் சம்பவம்

வவுனியா விசேட நிருபர்

வவுனியா வடக்கு, சின்னடம்பன் பகுதியில் யானை வேலி மின்சாரம் தாக்கி இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வவுனியா வடக்கு, சின்னடம்பன் பகுதியில் தொடர் யானைகள், பன்றிகளின் அச்சுறுத்தல் காரணமாக அங்குள்ள தோட்டக் காணி ஒன்றுக்கு யானை வேலி போடப்பட்டிருந்தது. குறித்த வேலிக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருந்த நிலையில் அதனை அவதானிக்காது குறித்த வேலி ஊடாக நேற்று முன்தினம் மாலை இளைஞன் ஒருவர் பயணித்துள்ளார்.

இதன்போது யானைக்கு வைத்த மின்சார வேலியில் சிக்கி அவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் கனகராயன்குளம், குறிசுட்டகுளம் பகுதியைச் சேர்ந்த 22 வயது உலகநாதன் கஜந்தன் என்பவராவார். இது தொடர்பில் நெடுங்கேணி பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## சாவகச்சேரியில் எரிபொருள் பவுசர் விபத்து; பாரம்பரிய சின்னம் சேதம்

கோப்பாய் குறூப் நிருபர்

யாழ்.சாவகச்சேரியில் எரிபொருள் பவுசர் பாதையோரமுள்ள மரபுரிமைச் சின்னமான கல்லில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.நேற்று (11) அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் மரபுரிமைச் சின்னமான கல் முற்றாக அழிவடைந்துள்ளது.

யாழ்.சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுணாவில் ஏ9 பிரதான வீதியில் நுணாவில் 190ஆம் கட்டைப் பகுதியில் தொல்பொருள் திணைக்களத்தால் மரபுரிமைச் சின்னமாக அடையாளப்படுத்தப்பட்ட கல் மீது எரிபொருள் பவுசர் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தினால் தொல்பொருள் திணைக்களத்தினால் மரபுரிமை சின்னமாக அடையாளப்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்த பாரம்பரிய கல் (சுமைதாங்கி) முற்றாக அழிவடைந்துள்ளது. இவ்விடத்தில் தொல்பொருள் திணைக்களத்தால் மரபுரிமைச் சின்னமாக அடையாளப்படுத்தப்பட்ட சுமைதாங்கி, இளைப்பாறும் மடம், குடிநீர்க்கிணறு என்பன காணப்படுகின்றன. இது தொடர்பாக சாவகச்சேரி நகரசபை மற்றும் தொல்பொருள் திணைக்களம் ஆகியவற்றுக்கு தெரியப்படுத்தியுள்ளோம்.

குறித்த இடத்தில் மரபுரிமைச் சின்னங்களான இளைப்பாறு மடம், ஆவுரஞ்சிக் கல், கிணறு, சுமை தாங்கி ஆகியன காணப்பட்ட நிலையில்



சுமைதாங்கி அழிவடைந்து அடையாளம் தெரியாமல் செய்யப்பட்டிருப்பதாக மேலும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.





வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் உத்தியோகத்தர்களுக்கான தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு வெளிக்களப் பயிற்சிப்பட்டறை ஊழியர்களுக்கிடையிலான குழு செயற்பாடு மற்றும் ஊக்கப்படுத்தலை மேம்படுத்துவதற்காக (Team building out bound training programme) நடத்தப்பட்ட பயிற்சியின் போது,....

## அச்சுவேலியில் நெசவு சபையை ஆக்கிரமித்த நபர்களை வெளியேறுமாறு ஆர்ப்பாட்டம்

யாழ்.விசேட நிருபர்

அச்சுவேலியில் அடாத்தாக அமைக்கப்பட்டுள்ள கிறிஸ்தவ மத சபையை அகற்றக் கோரி தொடர் போராட்டத்தினை முன்னெடுக்கும் முகமாக சபைக்கு முன்பாக கொட்டகை அமைத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் அச்சுவேலி பகுதியில் நெசவு சபையை அடாத்தாக கையகப்படுத்தி அதன் காணிக்குள் கிறிஸ்தவ மத சபை ஒன்று கட்டடம் கட்டி செப ஆராதனைகளை நடாத்தி வருகின்றது. குறித்த சபையை சேர்ந்தவர்கள் அதிக ஒலி எழுப்பி அயலவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தி வருவதாக அயலவர்கள் குற்றம் சாட்டி வந்தனர். இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை அதிக சத்தம் எழுப்பி செபித்துள்ளனர்.



அந்நிலையில் தமது செப கூட்டத்தின் மீது கல் வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறி அயல் வீடொன்றினுள் போதகர், அவரது மகன் உள்ளிட்ட மூவர் அத்துமீறி நுழைந்து அங்கிருந்த பெண்கள் மீது தாக்குதல் நடாத்தி இருந்தனர்.

தாக்குதலை அடுத்து பாதிக்கப்பட்டவர்கள் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து போதகர் உள்ளிட்ட மூவரையும் கைது செய்து விசாரணைகளின் பின்னர் பிணையில் செல்ல அனுமதித்தனர். குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் செய்திகள் வெளியிட்டார்கள் என கடந்த ஞாயிற்றுக்கிழமை உதயன் பத்திரிக்கை அலுவலகத்தினுள் போதகர் தலைமையில் சிறுவர்கள் பெண்கள் என 30க்கும் மேற்பட்ட கும்பல் புகுந்து ஊடகவியலாளர்கள், ஊடகப் பணியாளர்களை அச்சுறுத்தி இருந்தனர்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் பங்குனி மாதம் 29ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரமழான் பிறை 20

### குறள் தரும் சிந்தனை



செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே
உட்பகை உற்ற குடி

செப்பு எனப்படும் சிமிழில் அதன் மூடி பொருந்தியிருப்பது போல வெளித்தோற்றத்துக்கு மட்டுமே தெரியும் அவ்வாறே உட்பகையுள்ளவர்கள் உளமாரப் பொருந்தியிருக்க மாட்டார்கள்.

# புத்தாண்டு காலத்தில் பொதுமக்கள் மத்தியில் முன்னெச்சரிக்கை தேவை

நாட்டில் பண்டிகைகளின் காலமாக இம்மாதம் விளங்குகின்றது. நீண்ட காலத்திற்குப் பிறகு இவ்வாறான வாய்ப்பு இந்நாட்டில் வாழும் எல்லா இன மக்களுக்கும் கிடைக்கப் பெற்றுள்ளது. ஒரே மாதத்தில் வெவ்வேறு தினங்களில் இப்பண்டிகைகள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அதேநேரம், கடந்த நான்கு வருடங்களுக்கு பின்னர் இம்முறைதான் அதாவது 2019 ஆம் ஆண்டுக்குப் பிறகு அச்சம் பீதியற்ற சூழலில் பண்டிகையைக் கொண்டாடக்கூடிய சூழலை நாட்டு மக்கள் பெற்றுக் கொண்டுள்ளனர். அதனால் தத்தமது பண்டிகையை சிறப்பாகவும் விமரிசையாகவும் கொண்டாடுவதில் ஒவ்வொருவரும் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டுள்ளனர். இதற்கு பண்டிகையின் நிமித்தம் ஆயத்தமாவதில் மக்கள் வெளிப்படுத்தும் ஆர்வம் நல்ல எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது.

நான்கு வருடங்களுக்கு பின்னர் கிடைக்கப் பெற்றுள்ள இச்சூழலை சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ளவே மக்கள் எதிர்பார்க்கின்றனர். ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தைத் தமக்கு சாதமாகப் பயன்படுத்திக் கொள்ள திருடர்களும், முடிச்சுமாறிகளும், மோசடிக்காரர்களும், வழிப்பறிக் கொள்ளையர்களும் முயற்சிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் நாட்டு மக்கள் மத்தியில் விழிப்புணர்வையும் முன்னெச்சரிக்கையையும் ஏற்படுத்தும் வகையில் பொலிஸ் திணைக்களம் விஷேட அறிவுறுத்தல்களை மக்களுக்கு விடுத்து வேண்டுகோளையும் முன்வைத்து இருக்கின்றது.

இது தொடர்பில் பொலிஸ் திணைக்களப் பேச்சாளர் நிஹால் தல்துவ விடுத்துள்ள அறிவுறுத்தலில், இப்பண்டிகைக் காலப்பகுதியில் பலவித குற்றச்செயல்களும் முறைகேடுகளும், திருட்டுச் சம்பவங்களும் இடம்பெறக்கூடிய அச்சுறுத்தல்கள் காணப்படுகின்றன. அவற்றில் போலி நாணத்தாள்களைக் கொடுத்து பாவனையாளர்களை ஏமாற்றும் முயற்சிகள் இடம்பெறக் கூடிய சாத்தியங்களும் உள்ளன. அதனால் நாணயத்தாள்கள் குறித்து விழிப்புடன் செயற்பட்டு போலி நாணயத்தாள் அல்ல என்பதை மக்கள் உறுதிப்படுத்திக் கொள்வதில் கவனம் செலுத்தத் தவறக் கூடாது.

இவை இவ்வாறிருக்க, இக்காலப்பகுதியில் பண்டிகைக்கு ஆயத்தமாகவென பொருட்களை கொள்வனவு செய்யச் செல்லும் போது தங்கை நகைகளை அணிந்து செல்வதைத் தவிர்த்துக் கொள்வதும் பணப் பைகளைப் பாதுகாத்து கொள்வது குறித்தும் கூடுதல் கவனம் எடுத்துக் கொள்வதும் மிகவும் அவசியமானது. இக்காலப்பகுதியில் சனநெரிசல் மிக்க இடங்களில் திருடர்கள், மோசடிக்காரர்கள், முடிச்சுமாறிகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படக்கூடிய சாத்தியங்கள் அதிகளவில் காணப்படுகின்றன. அதனால் தம் தங்க நகைகள் மற்றும் பணப்பைகள் குறித்து முன்னெச்சரிக்கைகளுடன் நடந்து கொள்ள மக்கள் தவறக் கூடாது.

மேலும், தற்போதைய சூழலைப் பயன்படுத்தி தரமற்றதும் காலாவதியானதுமான பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு புதிய புதிய வியாபாரிகள் உருவாகலாம் என்பதையும் மறந்து விடலாகாது. அதனால் கொள்வனவு செய்யும் பொருட்களின் தரம் மற்றும் காலாவதியாகும் தினம் குறித்து அதிக அக்கறை எடுத்துக் கொள்ளவும் வேண்டும்.

பண்டிக்கைக் காலமான போதிலும் இவ்வாறான அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளக் கூடிய சாத்தியங்கள் காணப்படவே செய்கின்றன. இதனைக் கருத்தில் கொண்டு பொலிஸாருடன் சேர்த்து புலனாய்வுப் பிரிவினரும் இம்முறை பண்டிகைக் காலத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். மக்கள் இக்காலப்பகுதியில் விழிப்புணர்வுடனும் முன்னெச்சரிக்கையுடனும் நடந்து கொள்வது அவசியம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

உண்மையில் இது காலத்திற்கு அவசியமான அறிவுறுத்தலும் வேண்டுகோளும் ஆகும். தற்போதைய பண்டிகைக் காலப்பகுதியைப் பயன்படுத்தி மோசடிகளையும் முறைகேடுகளையும் மேற்கொள்ள தீய சக்திகள் முன்னெடுக்கும் முயற்சிகள் வெற்றி பெற இடமளிக்கலாகாது. அதற்கான பொறுப்பு மக்களிடமும் உள்ளது.

பொலிஸாரின் அறிவுறுத்தலுக்கு அமைய பொருட்களைக் கொள்வனவு செய்ய சனநெரிசல் மிக்க இடங்களுக்குச் செல்லும் போது தமது பணப்பைகள் குறித்தும் தங்க ஆபரணங்கள் குறித்தும் அதிக கவனம் எடுத்துக் கொள்ளத் தவறலாகாது.

அதேநேரம் போலி நாணயத்தாள்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்துவதும் அவசியம். அத்தோடு தாம் கொள்வனவு செய்யும் பொருட்களின் தரம் மற்றும் காலாவதியாகும் திகதி குறித்தும் கவனம் செலுத்த வேண்டும்.

மக்கள் விழிப்புணர்வுடனும் முன்னெச்சரிக்கையுடனும் செயற்படும் போது திருடர்களதும் மோசடிக்காரர்களதும் வழிப்பறி கொள்ளையர்களதும் முயற்சிகள் பலனளிக்க இடமிருக்காது. அத்தகைய விழிப்புணர்வும் முன்னெச்சரிக்கையுமே இன்றைய அவசரத் தேவை என்றால் அது மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

# ஆயிரம் மாதங்களை விடவும் பெறுமதியான இரவு 'லைலதுல் கத்ர்'



புனித ரமழான் நோன்பு மாதமானது இறைவனால் உலக முஸ்லிம்களுக்கு அருட்கொடையாக வழங்கப்பட்டதும், பல மடங்கு நன்மைகளை அறுவடை செய்யக்கூடிய சந்தர்ப்பமாக அமைத்துக் கொடுக்கப்பட்டதுமாகும். நோன்பு மாதம் பல வகையான சிறப்புகளை தன்னுள் பொதித்து வைத்திருப்பது யாவரும் அறிந்ததே. இப்புனிதமிகு மாதத்திலே ஒரு புனிதமான இரவு இருக்கிறது. அந்த இரவுதான் லைலதுல் கத்ர் என்று அறியப்படுகிறது.

இவ்விரவானது பொதுவாக முஸ்லிம்களாலும் அதேபோன்று எமது சகோதர மதங்களை சார்ந்தவர்களாலும், '27ம் நாள்' என்று அழைக்கப்படுகிறது. இவ்விரவு ஒரு புனிதத்துவம் வாய்ந்த இரவு என்பதை மாத்திரமே பிறமத சகோதரர்கள் அறிவார்கள்.

இந்த லைலதுல் கத்ர் முக்கியமான சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அதில் மிக முக்கியமான ஒன்றுதான் புனித அல்குர்ஆன் அகிலத்தார் அனைவருக்குமான அன்பளிப்பாகவும், வழிகாட்டியாகவும் அல்லாஹ்வால் இறைத்தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் ஊடாக உலகிற்கு அருளப்பட்டதாகும். அதாவது குர்ஆனின் முதல் சில வசனங்கள் இவ்விரவில் தான் வானவர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் ஊடாக அல்லாஹ்வால் அருளப்பட்டது.

'அல்லாஹ் குர்ஆனில் இவ்வாறு குறிப்பிடுகிறான் 'நிச்சயமாக நாம் நம் வேதமாகிய (அல்குர்ஆன்) இதனை கண்ணியமிக்க (லைலதுல் கத்ர்) எனும் இரவில் இறக்கி வைத்தோம்' (97ம் அத்தியாயம் 1ஆம் வசனம்).

மேலும் லைலத்துல் கத்ரின் அளவிட முடியாத பல சிறப்புகளில் ஒன்றுதான் இவ்விரவு ஆயிரம் மாதங்களை விட சிறந்தது என்று அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஒரே இரவில் செய்யப்படும் ஒவ்வொரு நற்செயலும், வழிபாடும் குறைந்தபட்சம் 83 வருட வழிபாட்டின் வெகுமதியைப் பெற்றுத் தருகின்றன, இவ்வளவு பெரிய காலப்பகுதியானது ஒரு மனிதனின் முழு ஆயுளுக்கும் சமமானதாகும்.



மேலும் இவ்விரவு பாவமன்னிப்புக்கான இரவாகவும் விளங்குகிறது. முஹம்மத் (ஸல்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்:

'யார் லைலதுல் கத்ருடைய இரவை வணக்கங்களுடனும், நம்பிக்கையுடனும் மற்றும் நன்மைக்கான எதிர்பார்ப்புடனும் கழிக்கிறாரோ அவரது முந்தைய பாவங்கள் மன்னிக்கப்படும்' (ஆதாரம் புஹாரி, முஸ்லிம்).

அதனால் அனைத்து முஸ்லிம்களும் இவ்விரவில் தான் முக்கியமாக தத்தமது முன் பின் பாவங்களை நினைத்து அதற்காக பாவமன்னிப்பு தேடுவதில் கூடுதல் கவனம் செலுத்துகின்றனர்.

இந்த லைலதுல் கத்ரை எதிர்பார்த்து அதனை உயிர்ப்பிக்கும் நோக்கோடு இரவில் மஸ்ஜித்களில் தரித்திருந்து பாவமன்னிப்பு தேடுதல், குர்ஆன் ஓதுதல், மேலதிகமான தொழுகைகளைத் தொழுதல் மற்றும் ஆன்மீக ரீதியான பிரசங்கங்களில் பங்கேற்றல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள். ஆனால், இறைத்தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறியிருக்கிறார்கள். 'நோன்பு மாதத்தின் இறுதி 10 நாட்களின் ஒற்றைப் படை இரவுகளில் ஒன்றில் லைலதுல் கத்ரை எதிர்பாருங்கள்'.
(ஆதாரம் புஹாரி).

அதனால் நோன்பு மாதத்தின் கடைசிப் பத்து நாட்களில் எந்தவொரு ஒற்றைப்படை இரவில் வேண்டுமானாலும் இந்த இரவு அமைந்திருக்கலாம். அதனால் முஸ்லிம்கள் இப்புனித இரவை கடைசிப் பத்து நாட்களிலும் எதிர்பார்த்து இறைவணக்கங்களில் ஈடுபடுவது அவசியம்.

ஒவ்வொருவரும் இவ்விரவின் சிறப்பை அறிந்து எதிர்பார்த்தவர்களாக இருந்து கடைசிப் பத்து நாட்களின் ஒவ்வொரு இரவையும் பயனுள்ளதாகவும் பிரார்தனைகளோடும் கழித்து ஈடேற்றங்களை அடைந்து கொள்ள முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் லைலதுல் கத்ரின் சிறப்பையும் நோன்பு மாத்தின் மகத்துவத்தையும் எம்மால் அடைந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். அந்த வகையில் இவ்வருட நோன்பு மாதத்தினதும் இறுதிப் பத்து நாட்கள் தற்போது ஆரம்பமாகியுள்ளன.

ஆகவே லைலதுல் கத்ரை அடைந்து கொள்ளவும் அதன் பாக்கியங்கள், அருள்களை அடைந்து கொள்ளவும் அல்லாஹ் எம் அனைவருக்கும் அருள் புரியட்டும்.

காலித் ரிஸ்வான்...

# புத்தாண்டை வரவேற்பதற்கு மரக்கன்றுகளை நடுவோம்!

புத்தாண்டின் மங்களகரமான தொடக்கத்துடன் எதிர்வரும் 14 ஆம் திகதி மரக்கன்றுகளை நட்டு, 'புத்தாண்டுக்கு ஒரு வழக்கம் சுற்றாடலுக்கு ஒரு மரக்கன்று' என்ற நிகழ்ச்சித் திட்டத்துடன் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் முயற்சியில் இணையுமாறு மத்திய சுற்றாடல் அதிகாரசபை இலங்கை மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

சுற்றாடல் அமைச்சு மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை இணைந்து ஏற்பாடு செய்துள்ள இத்திட்டம் எதிர்வரும் 14ஆ ம் திகதி முதல் 20ஆம் திகதி வரை (20ஆம் திகதி உட்பட) முன்னெடுக்கப்படும். அந்த வாரத்திற்குள் மரக்கன்று ஒன்றை நடுவதன் மூலம் எவர் வேண்டுமானாலும் இத்திட்டத்தில் சேரலாம்.

குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் பெரியவர்கள் என எந்த வயதினரும் 'புத்தாண்டுக்கான வழக்கம் சுற்றுச்சூழலுக்கு ஒரு மரக்கன்று' திட்டத்தில் சேரலாம். மருத்துவ மரக்கன்று, பழமரக் கன்று அல்லது உணவுத் தேவையை பூர்த்தி செய்யும் மரக்கன்றுகள் இத்திட்டத்தில் நடப்படலாம். நடப்பட்ட மரக்கன்று நீண்ட காலம் வாழும் மரக்கன்றாக இருப்பது முக்கியம். பங்கேற்பாளர்கள், நடுகை செய்யும் போது எடுக்கப்பட்ட புகைப்படம், பெயர், வயது, முகவரி, மாவட்டம், கிராமசேவை அலுவலர் பிரிவு, தொலைபேசி எண், நடப்பட்ட மரக்கன்றுகளின் பெயர், மரக்கன்றுகளின் உயரம் ஆகியவற்றை இணைத்து இத்திட்டத்தில் பதிவுசெய்து பதிவு செய்யலாம். இது தொடர்பான விபரங்களை gamadhushika@cea.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

நடுகை செய்த மூன்று மாதங்களுக்குப் பிறகு, நடப்பட்ட மரக்கன்றுகளின் வளர்ச்சி மற்றும் பராமரிப்பின் புகைப்படத்தை தொடர்புடைய மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம். அப்பணியை மேற்கொண்டவர்களுக்கு அவர்களின் சுற்றுச்சூழல் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் இலத்திரனியல் சான்றிதழ் பரிசாக வழங்கப்படும்.

மேலும், ஓராண்டுக்கு பின்னர் நடுவர்கள் குழு அமைத்து, கணக்கெடுப்பு நடத்தி, ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறந்த செடிகளை தேர்வு செய்து, செடிகளை நட்டு முறையாக பராமரித்தவர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட் தலைமையில், சுற்றாடல் அமைச்சின் செயலாளர் மருத்துவர் அனில் ஜாசிங்கவின் பங்களிப்புடன், வைபவ ரீதியாக இந்த நிகழ்ச்சியின் ஆரம்ப வைபவம் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் சுபுன் எஸ். பத்திரகே, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் P. B. ஹேமந்த ஜயசிங்க மற்றும் ஏனைய அதிகாரிகள் புத்தாண்டு தினத்தில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வளாகத்தில் இந் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.



இத்திட்டத்துக்கான ஊடக ஒருங்கிணைப்பு ஊடக அதிகாரியாக ஸ்ரீஜஞ்சனி லொகுலியன பணியாற்றுவார். (0776252288)

**P.B. ஹேமந்த ஜயசிங்க**
பணிப்பாளர் நாயகம்
மத்திய சுற்றுச்சூழல் ஆணையம்

# பலஸ்தீனப் போராட்டமும் பைத்துல் முகத்தஸ் மீட்பும்

சர்வதேச குத்ஸ் தினம் என்பது பலஸ்தீனியர்களுக்கும் பிற ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தி ஆதரவு வழங்கும் தினமாகும். குத்ஸ் தினமென்பது முஸ்லிம்களுக்கு மட்டும் உரிய தினமல்ல. அது அடக்குமுறைக்கு எதிரான அனைத்து மக்களினதும் தினம். அல் குத்ஸ் விடுதலைக்காக போராடி கொண்டிருக்கும் பலஸ்தீன மக்களுக்கு ஆதரவை தெரிவிப்பது நீதி நியாயத்தை நாடும் அனைத்து மக்களினதும் கடமையாகும்.

உலகம் முழுவதும் அமைதிகாக்கவும், நீதி காக்கவும் போராடும் மக்களின் முயற்சியை அங்கீகரிப்பது கட்டாயம். இமாம் கொமெய்னி (ரஹ்) அவர்கள் வலியுறுத்தியது போன்று 'குத்ஸ் தினம் என்பது ஒரு சர்வதேச தினம். இது குத்ஸுக்கே பிரத்தியேகமான நாள் அல்ல. அடக்கி ஒடுக்கப்பட்ட அனைவருக்காகவும், ஆணவ சக்திகளுக்கு எதிராக எழுந்து நிற்கும் தினமாக விளங்குகிறது.'

மறைந்த இமாம் கொமெய்னி (ரஹ்) அவர்கள், 1979 ஆகஸ்ட் 7ஆம் நாள், 'இந்த ஆக்கிரமிப்பாளரின் (இஸ்ரேல்) மற்றும் அதன் ஆதரவாளர்களின் கைகளை பலஸ்தீனத்திலிருந்து துண்டிக்க அனைத்து முஸ்லிம்களையும் முஸ்லிம் அரசாங்கங்களையும் ஒன்றிணைய நான் அழைப்பு விடுக்கிறேன். மேலும் ரமழான் மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமையை 'குத்ஸ் தினம்' என்று பெயரிடுமாறு உலகெங்கிலும் உள்ள அனைத்து இஸ்லாமியர்களையும் கேட்டுக் கொள்கிறேன். (பலஸ்தீனிய) முஸ்லிம்களின் சட்டபூர்வ உரிமைகளை ஆதரிப்பதில் முஸ்லிம்களின் சர்வதேச ஒற்றுமையை வெளிப்படுத்துமாறும் கோரிக்கை விடுக்கின்றேன். இத்தினமானது பலஸ்தீன மக்களுக்கு மட்டுமல்லாது, பிற ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உலகளாவிய ஆதரவைப் பிரதிபலிக்கிறது' என்று குறிப்பிட்டார்.



சியோனிசம் என்பது ஒரு இயக்கமாக, 1800களின் பிற்பகுதியில் யூதர்களை ஒன்றிணைப்பதற்காக உருவாக்கப்பட்டது. பலஸ்தீன மண்ணில் வெறும் 5% மட்டுமே யூதமக்கள் இருந்தனர். ஆனால் பிரித்தானிய ஏகாதிபத்திய சதியின் ஊடாக இஸ்ரேல் என்ற ஓர் அரசு உருவாக்கப்பட்டது.

இஸ்ரேலின் அக்கிரமங்களுக்கு எதிராகவும் பைத்துல் முகத்தஸை பாதுகாப்பதற்காகவும் பலஸ்தீனியர்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர். அவர்களின் வாழ்க்கையே போராட்டமாகவும் அவர்களின் பிரதேசங்கள் போராட்டக்களமாகவும் மாறியுள்ளன. புனித பூமியை பாதுகாப்பதற்காக இதுவரை இலட்சக்கணக்கான உயிர்கள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் உலகளாவிய ரீதியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் சர்வதேச குத்ஸ் தினத்தில், பலஸ்தீன் போராட்டத்திற்கு ஆதரவான சிறப்புக் கட்டுரைகள், ஊர்வலங்கள் மற்றும் பொதுக்கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

மறைந்த தென்னாபிரிக்கத் தலைவர் நெல்சன் மண்டேலா, 'பலஸ்தீன் விடுவிக்கப்படும் வரை எமது சுதந்திரம் பூரணத்துவம் அடையாது என்பதை நாம் நன்கு அறிவோம்' என்றுள்ளார்.

பலஸ்தீன் பூமி நபிமார்கள் நடமாடிய ஒரு பிரதேசம். பைத்துல் முகத்தஸ் முஸ்லிம்களின் முதல் கிப்லா. நபிமார்களுக்கு இமாமாக நின்று நபி (ஸல்) அவர்கள் தொழுகை நடத்திய இடம், நன்மையை நாடி பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்ட மூன்று பள்ளிவாசல் இது. எனவே ஜெருஸலம் பூமியும் பைத்துல் முகத்தஸ் பள்ளிவாசலும் முழு முஸ்லிம் உம்மத்திற்கும் சொந்தமானவை.

இவ்வருடம் ஏப்ரல் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இலங்கையில் விடுமுறை தினமாக இருப்பதால், இரண்டு தினங்கள் முற்படுத்தப்பட்டு, ஏப்ரல் 12 ஆம் திகதி சர்வதேச குத்ஸ் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

அன்றைய தினம் ஃபலஸ்தீன போராட்ட வரலாறு, பைத்துல் முகத்தஸ் வரலாறு, குறித்த தகவல்களை மக்களுக்கு விளக்கிச் சொல்வது அவசியம். குத்பா மேடைகளை அதற்காக பயன்படுத்த முடியும். இந்த புனித ரமழான் மாதத்தில் ஒவ்வொரு தொழுகையின் பின்னரும் பலஸ்தீர்களின் வெற்றிக்காக பிரார்த்திக்க வேண்டும்.

தாஹா முஸம்மில்...

# சித்திரைப் புத்தாண்டுக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் VRK அணி வெற்றி

மலரவிருக்கும் தமிழ் சிங்கள சித்திரை புத்தாண்டை கிரிக்கட் விளையாட்டுடன் வரவேற்பதற்காகவும், கல்முனைப் பிரதேச இளைஞர்களுக்கு இடையிலான நட்புப் பாலத்தினை மேலும் மேம்படுத்தும் நோக்கத்துடனும், கல்முனையில் நடத்தப்பட்டு வந்த புத்தாண்டுக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் VRK அணி வெற்றிவாகை சூடி புத்தாண்டு சாம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

Cric breath ஏற்பாட்டில் மிகக்கோலாகலமாக ஏற்பாடு செய்யப்பட்ட புத்தாண்டு கிண்ண இறுதி போட்டியில் VRK STALLIONS அணியினரை எதிர்த்து SHESHAN 11 LEOPARDS அணியினர் மோதியிருந்தனர். இப்போட்டி கல்முனை உவெஸ்லி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற VRK அணியினர் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்திருந்தனர். அதனடிப்படையில் துடுப்பெடுத்தாடிய SHESHAN 11 அணியினர் 09 பந்துவீச்சு ஓவர்களுக்கு முகங்கொடுத்து தங்களது சகல விக்கட்களையும் இழந்து 46 ஓட்டங்களை பெற்று கொண்டனர். 47 என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய VRK அணியினர் 6.2 பந்துவீச்சு ஓவர்கள் முற்றுப் பெற்ற வேளையில் 4 விக்கட்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்து Cric breath இன் 2023 இற்கான புத்தாண்டு கிண்ணத்தின் வெற்றியாளர்களாக தெரிவாகினர்.



வெற்றி பெற்ற VRK அணியினருக்கு 50 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வெற்றிக்கிண்ணமும் வழங்கப்பட்டன. இரண்டாம் இடம் பெற்ற Sheshan 11 அணியினருக்கு 30 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வெற்றிக்கிண்ணமும் வழங்கப்பட்டன. கல்முனையின் பாரம்பரியம் மிக்க பழைய தனியார் கழகங்களுடன் சில புதிய கழகங்களும் சேர்ந்து மொத்தமாக 07 அணிகள் பங்குபற்றின. நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை உவெஸ்லி பாடசாலை அதிபர் செ.கலையரசன் பங்கேற்றார். கௌரவ அதிதிகளாக கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர்களான சந்திரசேகரம் ராஜன் , கே. செல்வராஜா, தனு மற்றும் இச்சுற்றுத் தொடருக்கான கழகங்களின் உரிமையாளர்களான நிசேந்திரராஜ், சங்கீத், லோகராஜா, தேவதீசன், சுஜீந்தர், கோபு ஆகியோர் கலந்து கொண்டனர்.

இம்மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் DINESH 11 DOMINATORS, KIMA FIGHTERS, SHESHAN 11 LEOPARDS, VRK STALLIONS, KIRTHIK HAISNU BROS, RICH 11 TIGERS, VETRI VINAYAGAR ஆகிய ஏழு அணிகள் பங்குபற்றின.

வி.ரி.சகாதேவராஜா...

# கிழக்கின் குரல்



மருதமுனை சுனாமி வீட்டுத் திட்டம்

## முஷாரப் எம்.பி.யின் முயற்சியினால் வீடுகள் பயனாளிகளுக்கு கையளிப்பு

**கல்முனை மத்திய தினகரன், அட்டாளைச்சேனை விசேட, பெரியநீலாவணை விசேட நிருபர்கள்,**



கடந்த 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியினால் பாதிக்கப்பட்ட மருதமுனை மக்களுக்காக கட்டப்பட்டு, 16 வருடங்களாக கையளிக்கப்படாமலிருந்த மருதமுனை மேட்டுவட்டை வீட்டுத்திட்டத்தில் ஒருதொகுதி வீடுகள் உரிய பயனாளிகளுக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை (10) கையளித்து வைக்கப்பட்டன.

பாராளுமன்ற உறுப்பினரும் கல்முனை பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான எஸ்.எம்.எம். முஷாரப் எடுத்த முயற்சியினால், இந்த வீடுகள் பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டன.

கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி தலைமையில் கல்முனை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் முஷாரப் எம்.பி. பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதுடன், பயனாளிகளுக்கு வீட்டு ஆவணங்களை வழங்கி வைத்தார்.

மருதமுனை மேட்டுவட்டை 65 மீற்றர் வீட்டுத்திட்டப் பயனாளிகளைத் தெரிவு செய்வதில் காணப்பட்ட இழுபறி நிலை காரணமாக இந்த வீட்டுத்திட்டம் கையளிக்கப்படாமல் இதுவரைகாலமும் இழுத்தடிக்கப்பட்டது.

இந்நிலையில், மருதமுனை மேட்டுவட்டை வீட்டுத்திட்டம் தொடர்பாக அண்மையில் நடைபெற்ற கல்முனை பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முஷாரப் எம்.பி.யின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. இந்த வீட்டுத்திட்டத்தை எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் உரிய பயனாளிகளுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக இதன்போது முஷாரப் எம்.பி. உறுதியளித்ததுடன், பயனாளிகளை தெரிவு செய்யுமாறும் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலிக்கு அவர் பணித்திருந்தார்.

இந்த வீடுகள் சிறுகச் சிறுகச் சேதமடைந்திருந்தாலும், அவற்றை முதலில் பயனாளிகளுக்கு கையளிப்பதற்கும் பின்னர், நாட்டின் பொருளாதார நிலைமை ஓரளவு சீராகியதும் அரசாங்கத்தின் நிதியுதவியில் அவற்றை புனரமைப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாக, முஷாரப் எம்.பி. தீர்மானம் நிறைவேற்றினார்.

அத்துடன், இந்த வீட்டுத்திட்டத்தை சென்று பார்வையிட்ட முஷாரப் எம்.பி., இது தொடர்பாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸுடனும் கலந்துரையாடினார்.

இதனைத் தொடர்ந்து, இந்த வீட்டுத்திட்டத்தை கையளிப்பதற்கான நடவடிக்கையில் முஷாரப் எம்.பி.யுடன் இணைந்து கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி ஒழுங்குகளைச் செய்திருந்த நிலையில், இந்த வீட்டுத்திட்டத்தில் ஒருதொகுதி வீடுகள் உரிய பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்ளஸ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## கிழக்கில் சுற்றாடல் சார்ந்த பிராந்திய வலையமைப்பை உருவாக்க திட்டம்



**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

கிழக்கு மாகாண சுற்றாடல் சார்ந்த அரசசார்பற்ற நிறுவனங்களின் பிராந்திய வலையமைப்பை ஸ்தாபிப்பதற்தான கலந்துரையாடல், சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட்டின் தலைமையில் மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (10) நடைபெற்றது.

கிழக்கு மாகாண மட்டத்தில் சுற்றாடலைப் பாதுகாக்கும் உபகுழுக்களை நியமிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையிலேயே, கிழக்கு மாகாணத்துக்கான பிராந்திய வலையமைப்பு ஸ்தாபிக்கப்படவுள்ளது.

மாவட்ட, பிரதேச மட்டங்களில் இளைஞர்களை இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்தி, நாடளாவிய ரீதியில் இந்தத் திட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாக, அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிலையில், சுற்றாடலிலுள்ள மனிதன் முதல் சகல ஜீவராசிகளையும் இயற்கை அனர்த்தங்கள் மற்றும் அழிவுகளிலிருந்து பாதுகாப்பதற்கான பங்களிப்பை வழங்குதல், மட்டக்களப்பு மாவட்டத்தில் கண்டல் தாவரங்களை மதிப்பீடு செய்தல், அத்தாவரங்களை புதிதாக நடுதல் மூலம் உயிர்ப் பல்வகைமையை அதிகரிப்பதற்காக இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அந்த வகையில், பொருத்தமான திட்டங்களை அடையாளம் கண்டு, பசுமையான சமூகச் செயற்பாட்டினால் நிலைபேறான அபிவிருத்தியை மேற்கொள்ளவுள்ளதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

## பெண்ணின் சடலம் வெல்லாவெளியில் மீட்பு

**மண்டூர் தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கணேசபுர பிரதேசத்திலுள்ள குளத்திலிருந்து வயோதிபப் பெண் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை (09) சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

கணேசபுரம் மண்டூர் பிரதேசத்தைச் சேர்ந்த 98 வயதுடைய ஒரு பிள்ளையின் தாய் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவ தினத்தன்று வீட்டிலிருந்த இந்த வயோதிபப் பெண் திடீரெனக் காணாமல் போன நிலையில், இவரை உறவினர்கள் தேடியுள்ளனர். இதன்போது, மேற்படி குளத்தில் இப்பெண் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

களுவாஞ்சிக்குடி நீதிமன்ற நீதவான் ஜே.வி.ஏ.ரஞ்சித்குமாரின் உத்தரவுக்கு அமைய சம்பவ இடத்துக்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்டதுடன், விசாரணையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் கையளிக்க பணித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வெல்லாவெளி பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஒலுவிலில் மர்ஹூம் ஆசுகவி அன்புடீனின் நினைவுப்பேருரை



**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**

மூத்த எழுத்தாளர் மர்ஹூம் ஆசுகவி அன்புடீனின் நினைவுப் பேருரையும் விசேட துஆ பிரார்த்தனையும் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியினுடைய அம்பாறை மாவட்டச் சம்மேளத்தின் ஏற்பாட்டில் ஒலுவில் கிறீன் விளாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (09) நடைபெற்றது.

மர்ஹூம் ஆசுகவி அன்புடீனுக்கான நினைவுப் பேருரையை அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியினுடைய முன்னாள் தேசிய தலைவரும் நிறைவேற்றுப் பணிப்பாளருமான எம்.ஐ.உதுமாலெப்பையும் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியினுடைய அம்பாறை மாவட்டச் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் பாவேந்தல் பாலமுனை பாறூக்கும் நிகழ்த்தினர்.

துஆ பிரார்த்தனையை அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியினுடைய அம்பாறை மாவட்டச் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர், ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் மௌலவி யூ.எம்.நியாஸி நடத்தினார்.

மர்ஹூம் ஆசுகவி அன்புடீன், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியினுடைய அம்பாறை மாவட்டச் சம்மேளனத்தின் தலைவராகவும் அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ.யின் உப தலைவராகவும் செயற்பட்டவராவார்.

## மட்டு. கடற்றொழிலாளர்களின் நலனில் கரிசனை செலுத்திய அமைச்சர் டக்ளஸ்

**கல்லடி, மட்டக்களப்புகுறூப், மட்டக்களப்பு விசேட, புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்**



மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழிலாளர்களின் நலன் தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (10) நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது, இம்மாவட்ட கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் கொண்டு வந்தார்.

இதனைத் தொடர்ந்து, கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு ஆலோசனை வழங்கிய அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா, சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கையை எடுக்குமாறும் அதிகாரிகளுக்கு பணித்தார்.

வாகரையின் வட்டவான் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் இறால் வளர்ப்புத் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டதுடன், பல்வேறு ஆலோசனைகளையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்வைத்தார்.

மட்டக்களப்பில் அதிகளவில் களப்புகள் காணப்பட்டாலும், மீன் உற்பத்தி குறைவாக இருப்பதை சுட்டிக்காட்டிய இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், பண்ணை முறையில் மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்ய வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தினார்.

அத்துடன், இம்மாவட்டத்திலுள்ள வளங்களைப் பயன்படுத்தி மீன்பிடித்துறையில் உச்சக்கட்டப் பயனடைய வேண்டுமெனவும், இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

## தம்பலகாமம் பிரதேசத்தில் சித்திரை புத்தாண்டுச் சந்தை

**தம்பலகாமம் குறூப் நிருபர்**



திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு சமுர்த்திக் கிளை ஏற்பாடு செய்த சந்தை நிகழ்வு, அப்பிரதேச செயலக வளாகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (10) நடைபெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலின் கீழ் நடைபெற்ற இச்சந்தையில் நஞ்சற்ற உணவு உற்பத்திகளான மரக்கறி வகைகளும் உள்ளூர் உற்பத்திப் பொருட்களும் விற்பனைக் காட்சிக் கூடங்களில் காட்சிப்படுத்தப்பட்டதுடன், விற்பனையும் நடைபெற்றது.

இதில் தம்பலகாமம் உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், சமுர்த்திக் கிளை உத்தியோகத்தர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டு நன்மையடைந்தனர்.

## சம்மாந்துறை வைத்தியசாலைக்கு மருந்துப்பொருட்கள் கையளிப்பு



சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்குத் தேவையான ஒருதொகுதி மயக்க மருந்துப் பொருட்கள், சம்மாந்துறை நலன்புரி மற்றும் அபிவிருத்திச் சபையினால் அண்மையில் கையளித்து வைக்கப்பட்டன.

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர், வைத்தியக் கலாநிதி அஸாத் எம்.ஹனிபாவிடம் இவை கையளித்து வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் மருத்துவர்களான கபூர், றிஸ்வான், பொறியளாளர்களான ஜவாஹிர், மஜீட், அன்சார், சலாம் ஆகியோர் பங்குபற்றினர்.

மட்டக்களப்பில்

## அனர்த்த முன்னெச்சரிக்கை கோபுரங்கள் பரிசோதனை

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனர்த்த முன்னெச்சரிக்கை கோபுரங்களின் பராமரிப்பு நடவடிக்கையை பேணும் முகமாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை (10) அக்கோபுரங்களிலிருந்து ஒலி எழுப்பப்பட்டு அவற்றின் ஒலிபெருக்கிகள் பரிசீலிக்கப்பட்டன.

களுவங்கேணி, காத்தான்குடி, புதுக்குடியிருப்பு போன்ற முன்னெச்சரிக்கை கோபுரங்கள் பரிசீலிக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அனுசரணையுடன் 233ஆவது இராணுவ படைப் பிரிவின் இராணுவ அதிகாரிகள் இதனை பரிசீலித்தனர்.

இதன்போது இராணுவத்தினர், மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அதிகாரிகள் பிரசன்னமாகியிருந்தனர்.

## காரைதீவு பிரதேசத்தில் கலாசார விளையாட்டு விழா

**காரைதீவு குறூப் நிருபர்**

காரைதீவு விளையாட்டுக்கழகமும் விபுலானந்தா சனசமூக நிலையமும் கல்முனை சொர்ணம் நகைமாளிகையும் இணைந்து நடத்தும் மாபெரும் கலாசார விளையாட்டு விழா எதிர்வரும் 15ஆம் திகதி காரைதீவுப் பிரதேசத்தில் நடைபெறவுள்ளது.

காரைதீவு விளையாட்டுக்கழகத் தலைவர் த.தவக்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில், பிரதம அதிதியாக இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். சீர்பெறு அதிதியாக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேஷன் கலந்துகொள்ளவுள்ளார்.

அன்றையதினம் காலை மரதன் ஓட்டமும் மாலையில் தலையணைச்சமர், முட்டி உடைத்தல், தேங்காய் துருவுதல், மிட்டாய்பை ஓட்டம், கிடுகிழைத்தல், தடைதாண்டி ஓட்டம், பலூன் ஊதி உடைத்தல், சூப்பியில் பால் குடித்தல், கயிறு இழுத்தல், எலி ஓட்டம், விநோத உடைப்போட்டி போன்றவை நடைபெறவுள்ளதாக, காரைதீவு விளையாட்டுக்கழக செயலாளர் எஸ்.கிருஷாந்தன் தெரிவித்தார்.

கௌரவ அதிதிகளாக அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன், முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## மூதூரில் முஸ்லிம் பெண்கள் வலையமைப்பின் இப்தார்

**றொட்டவெவ குறூப் நிருபர்**



திருகோணமலையின் மூதூர் முஸ்லிம் பெண்கள் வலையமைப்பின் அங்குரார்ப்பண நிகழ்வும் இப்தார் நிகழ்வும் மூதூர் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (10) நடைபெற்றன.

இந்நிகழ்வுகளை மூதூர் முஸ்லிம் பெண்கள் வலையமைப்பிலுள்ள 170 பெண்கள் இணைந்து நடத்தினர். முஸ்லிம் பெண்களின் ஆளுமை விருத்தி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு இந்நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

இந்நிகழ்வுகளுக்கான அனுசரணையை AHRC நிறுவனம் வழங்கியது. இந்நிகழ்வுகளில் மூதூர் பிரதேச செயலாளர், உதவித் திட்ட பணிப்பாளர், பெண் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# பேருவளை அக்கர தாஅட்ட (18 ஏக்கர்) கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஸாவியா மஸ்ஜித்

பேருவளை பிரதேச சபைக்குட்பட்ட அக்கர தாஅட்ட (18 ஏக்கர்) இறப்பர் தோட்ட காணியில் முஸ்லிம் குடும்பங்கள் தற்போது படிப்படியாக வீடுகளை அமைத்து குடியேறி வருகின்றனர். இங்கு வாழும் மக்களின் ஐவேளை தொழுகை கடமையை மேற்கொள்ள பள்ளிவாசலொன்று இல்லாமல் இருந்த நிலையில் இரத்தினக்கல் வர்த்தகர்கள், தொழிலதிபர்கள், பரோபகாரிகள், ஊர் ஜமாஅத்தினரின் நிதியுதவியுடன் ஸாவியா மஸ்ஜிதொன்று புதிதாக அமைக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.





ஷாதுலியதுஷ் ஸாலிஹீன் ஸாவியா மஸ்ஜித் என பெயரிடப்பட்டு வக்ப் செய்து இஸ்லாமிய முறைப்படி திறந்து வைக்கப்பட்டதோடு திக்ர் (ஹழரா) மஜ்லிஸும் துஆப் பிரார்த்தனையும் இடம்பெற்றது.

சீனன்கோட்டை பள்ளிச் சங்கத் தலைவர் ஏ.எச்.எம்.முக்தார் ஹாஜியார் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மாத்தறை மின்னத்துல் பாஸிய்யா அரபுக் கல்லூரி அதிபர் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி எம்.எஸ்.எம். இப்திகார் (பாரி) விசேட சொற்பொழிவாற்றினார்.

சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னர் ஏ.எச்.எம்.ஹிகாம் ஹாஜியார் (12 1/2) பர்ச்சஸ் காணியை வாங்கி பள்ளிவாசல் அமைக்க அன்பளிப்புச் சொய்தார்.

அதனோடு பள்ளிவாசல் அமைக்கும் முயற்சி பள்ளிச் சங்கத்தின் வழிகாட்டலின் கீழ் முன்னெடுக்கப்பட்டது.

பள்ளிச் சங்க இணைச் செயலாளர் எம்.எம்.எம்.சிஹாப் ஹாஜியார் தலைமையில் அடிக்கல் நடும் நிகழ்வு நடைபெற்றது.

சுமார் ஒரு வருட காலத்திற்குள் இந்த ஸாவியா மஸ்ஜித் நிர்மாணிக்கப்பட்டதோடு இதனை நிர்மாணிப்பதில் பேருவளை அத்தக்வா அமைப்பின் தலைவர் எம்.ஏ.எம். அஸ்லம் ஹாஜியார் ஆரம்பத்தில் தனது பங்களிப்பை வழங்கியுள்ளார்.







பின்னர் சீனன்கோட்டையைச் சேர்ந்த இரத்தினக்கல் வர்த்தகர் ஏ.எச்.எம். ஹிகாம் ஹாஜியார் தலைமையில் நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டதுடன் மற்றும் எம்.ஏ.ஆர்.எம்.ஸாஜஹான், எம்.ஜே.எம்.சியான் ஜிப்ரி உட்பட ஊர் ஜமாஅத்தினர், பிரதேச வாசிகளும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கினர்.

**நிகழ்வில் அனில் சேனாரத்ன (பொடி மஹத்தயா) உரையாற்றும் போது**


எமது கிராமத்தில் வசிக்கும் இஸ்லாமியர்களது சமய கடமைகளை மேற்கொள்ள பள்ளிவாசல் ஒன்று அமைக்கப்பட்டு இன்று திறந்து வைக்கப்படுகிறது.

இதையிட்டு சிங்கள சகோதரர்களாகிய நாம் பெருமகிழ்ச்சியடைகிறோம். திறப்பு விழாவுக்கு பெரும்பான்மை சமூகத்தினரையும் அழைத்து கௌரவப்படுத்தியமையானது சிங்களமுஸ்லிம் ஒற்றுமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

சிங்களமுஸ்லிம் இன உறவைக் கட்டியெழுப்பி இக் கிராம மக்கள் எந்தவிதப் பிரச்சினைகளுமின்றி கடைசி வரை பரஸ்பர புரிந்துணர்வோடு ஒரு தாய் மக்களாக வாழ உறுதி பூணுவோம். இக்கிராமத்தின் மற்றுமோர் முக்கியஸ்தரான ஈ.எச்.டி.ரொசான் (கலு மஹத்தயா) கருத்துத் தெரிவித்த போது











அக்கர தாஅட்ட கிராமத்தை சிங்கள முஸ்லிம் இன உறவுக்கான ஓர் முன்மாதிரிக் கிராமமாக முழு நாட்டிற்கும் எடுத்துக் காட்டுவோம். இரு சமூகத்தினரும் தத்தமது இன்ப துன்பங்களில் பங்கெடுத்து ஒற்றுமையாக வாழ்வோம். ஒற்றுமையின் மூலமே எமக்கு பல வகையிலும் முன்னேற்றம் உண்டு என்றார்.

பள்ளிச் சங்க பிரதித் தலைவர் எம்.எஸ்.எம்.ரஸ்வி ஹாஜியார், உப தலைவர் அல்ஹாஜ் முஸ்தாக் ஜாபிர், இணைச் செயலாளர்களான எம்.எம்.எம்.சிஹாப் ஹாஜியார், அல்ஹாஜ் ரம்லான் அரூஸ், அல்ஹாஜ் றிம்ஸான் ஹம்ஸா, இணைப் பொருளாளர்களான அல்ஹாஜ் ஸப்பான் நயீம், அல்ஹாஜ் எம்.எம்.எம்.ஹில்மி, அல்ஹாஜ் ஏ.இஸட்.எம்.ஸவாஹிர். உறுப்பினர் அஷ்ஷெய்க் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் இப்திகார் ஜமீல், குர்ஆன் மதாரிஸ் பணிப்பாளர் மௌலவி எம்.பஹ்ருத்தீன் (மிஸ்பாஹி) தொழிலதிபர் அமீர் ஸுல்தான் கலந்தர் சபீக், இரத்தினக்கல் வர்த்தகர் இபாம் ஸாலி ஹாஜியார் உட்பட உலமாக்கள், ஊர் ஜமாஅத்தினர்கள் நிகழ்வில் பங்குபற்றினர்.

**பேருவளை பீ.எம்.முக்தார்**

# மலையகத்தில் பல அபிவிருத்தி திட்டங்கள்; புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

மலையக மக்களின் நிலைப்பேண்தகு அபிவிருத்தி திட்டங்கள் பல அமுல்படுத்தப்படவுள்ளதாக பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி தெரிவித்துள்ளார்.



நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளருமான ஜீவன் தொண்டமானின் எண்ணகருவுக்கமைய தேசிய மற்றும் சர்வதேச ஸ்தாபனங்களின் உதவியோடு செயற்படுத்தப்படவுள்ளது.

மலையகத்தில் பல அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்வதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்திற்கும், சர்வதேச நிறுவனமான வேர்ல்ட் விஷன் நிறுவனத்திற்கும் இடையே அண்மையில் கைச்சாத்திடப்பட்டது. இந்நிகழ்வில் நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி, சர்வதேச நிறுவனமான வேர்ல்ட் விஷன் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் கலாநிதி தனம் சேனாதிராஜா மற்றும் இரு நிறுவனங்களின் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தார்கள். இந்நிகழ்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார சிக்கல்களில் இருந்து மீண்டெழ பல நாட்டு தூதரகங்களும் சர்வதேச ஸ்தாபனங்களும் உதவிக் கரங்களை நீட்டி வருகின்றன.

உணவுத் தட்டுப்பாடு, சுத்தமான குடிநீர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி போன்றவற்றை மையப்படுத்தி பல வேலை திட்டங்களை நிதியத்தின் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளது.





கண்டி தெற்கு மாவட்ட தொழிலாளர் ஆலோசனை சபையின் கூட்டம் கண்டி தொழிற் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன்போது, கண்டி (தெற்கு) உதவி தொழில் ஆணையாளர் திருமதி திசாநாயக்க உரையாற்றுவதையும் கலந்துக் கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

படங்கள்: நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்

# மாத்தளை விவசாயிகளுக்கு 347 மில்லியன் ரூபா பெறுமதியான உர வகைகள் விநியோகம்

**மாத்தளை சுழற்சி நிருபர்**

மாத்தளை மாவட்ட விவசாயிகளுக்கு 347 மில்லியன் ரூபா பெறுமதியான உர வகைகள் இவ்வருடத்தில் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளதாக மாத்தளை மாவட்ட கமல நல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் பி.எம்.எச். குமாரி ஹாமி தெரிவித்தார்.

மாத்தளை மாவட்ட செயலாளர் கேட்போர் கூடத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர்,..

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைவாக விவசாய அமைச்சினால் நாடளாவிய ரீதியில் விவசாயிகளுக்கு இலவசமாக உரம் வழங்கப்படும் வேலை திட்டத்தின் கீழ் மாத்தளை மாவட்டத்திலும் முன்னெடுக்கப்படுகிறது. இதற்காக மாவட்டத்தில் இதுவரையில் 325 மெட்ரிக் தொன் 63,349 லீட்டர் திரவ உர வகைகள், 2261 மெட்ரிக் தொன் யூரியா உரம், டி.எஸ்.பி 39 மெட்ரிக் தொன் என்ற அடிப்படையில் விவசாயிகளுக்கு கமநல சேவைகள் காரியாலயத்தினூடாக விநியோகிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு சீன அரசின் உதவியுடன் விவசாயிகளுக்கு இலவசமாக டீசல் வழங்கும் நடவடிக்கைகளும் இம் மாவட்ட விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# விண் ஓடம் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள இஸ்ரோ

## விரைவில் வெற்றி பெறுவோம் என இந்திய விஞ்ஞானிகள் பெருமிதம்

அமெரிக்காவுக்கு நிகராக விண்வெளிப் பயணங்களில் விண் ஓடத்தைப் பயன்படுத்தும் ஆற்றலை இந்தியா பெற்றுவருவதாக அவதானிப்புகள் மூலம் தெரிய வந்திருப்பதாக இந்திய விண்வெளி ஆர்வலர்கள் கூறியுள்ளனர்.

அமெரிக்க கோடீஸ்வரர் எலொன் மஸ்கின் 'ஜ்பேஸ்எக்ஸ்' நிறுவனம் மட்டுமே நாஸாவுக்காக விண் ஓடங்களை தயாரித்து வந்தது. 1981ம் ஆண்டில் மீண்டும் உபயோகிக்கப்படக் கூடிய கொலம்பியா விண் ஓடத்தை தயாரிக்கும் முயற்சியில் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ ஈடுபட்டுள்ளது.

இவ் விண் ஓடத் தயாரிப்பு முயற்சிகள் தற்போது ஆரம்பக்கட்டத்தில் இருப்பதாகவும், விண் ஓடம் தொடர் பரிசோதனைகளில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

சமீபத்தில் ஒரு ஹெலிகொப்டர் மூலம் 4.5 கி.மீ. உயரத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட இந்த சுயமாக தரையிறங்கக்கூடிய விண் ஓடம் 350 கி.மீ வேகத்தில் ஓடு பாதையில் தரை இறங்கி, ஓடு பாதையையும் தாண்டிச் சென்றதாக விஞ்ஞானி ஒருவர் தகவல் தெரிவித்துள்ளார். மீள உபயோகிக்கும் விண் வாகனத்தை உருவாக்கும் இந்திய முயற்சி படிப்படியாக முன்னேற்றம் கண்டு வருவதாகவும் 2016 இல் ஆரம்பமான இத்திட்டம் 2019இல் விண்ணில் பரிசோதிக்கும் அளவுக்கு முன்னேற்றம் கண்டிருப்பதாகவும் இஸ்ரோ தகவல்கள் மூலம் அறிய முடிகிறது.

# மனைவியால் கழுத்து நெரிக்கப்பட்டு நித்திரையிலிருந்த கணவன் கொலை

**அக்குறணை குறூப் நிருபர்**

உறவினர் வீடொன்றில் நிகழ்ந்த அன்னதான வைபவத்திற்குச் செல்ல, கணவன் அனுமதி வழங்காததால் ஆத்திரமுற்ற மனைவி நித்திரையில் இருந்தபோது கணவனை கொலை செய்த சம்பவம் ஒன்று வலப்பனை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

வலப்பனை, பாலுகெதர பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கணவனைக் கொலை செய்த மனைவியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரை நீதிமன்றில் ஆஜர் செய்த போது எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வலப்பனை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

உயிரிழந்தவர் 44 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை எனவும், அவர் உறங்கிக் கொண்டிருந்த போது மனைவி கழுத்தை நெரித்து கொன்றுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வலப்பனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சோமாலியாவில் அமைதி நிலையை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு இந்தியா இரண்டு மில்லியன் டொலர் உதவி


சோமாலியாவில் இயல்பு நிலையையும் நிலையான ஆட்சியையும் ஏற்படுத்தும் வகையில் ஐக்கிய நாடுகள் நம்பிக்கை நிதியத்துக்கு இந்தியா 20 இலட்சம் டொலர்களை அளித்துள்ளது. இந்தியாவின் ஐ.நா.வுக்கான நிரந்தர பிரதிநிதி ருச்சிரா காம்போஜ் இதற்கான காசோலையை கடந்த வெள்ளியன்று கையளித்தார்.

சோமாலியாவில் இயல்பு நிலையை ஏற்படுத்தும் வகையில் ஆபிரிக்க யூனியன் அமைப்பு அங்கே சமாதான படையை வைத்துள்ளதோடு அல்சபா பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. ஐ.நா. தீர்மானத்தின் பிரகாரம் இயங்கிவரும் இந்த அமைப்பின் செயல்பாடுகளுக்காகவே இந்தியா இந்நிதியை வழங்கியுள்ளது. இந்தியா ஏற்கனவே இந்த அமைப்புக்கு நான்கு மில்லியன் டொலர்களை வழங்கியிருந்தது.

சோமாலியாவில் இயல்புநிலையை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு தொடர்ச்சியாக ஆதரவு வழங்கிவரும் இந்தியா, கடந்த 30 ஆண்டுகளாக ஐ.நா. அமைதிப் படையில் தன் துருப்புகளை இடம்பெறச் செய்துள்ளது. கடந்த ஆண்டு உருவாக்கப்பட்ட ஆபிரிக்க யூனியன் சமாதானத் திட்டத்தின்படி இவ்வாண்டு இறுதிக்குள் சோமாலிய பாதுகாப்பை முழுமையாக சோமாலிய படையினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. அல்சபா பயங்கரவாதத்தை ஒடுக்கி இயல்பு நிலையை அங்கே தோற்றுவிப்பதே ஆபிரிக்க யூனியனின் பணியாக உள்ளது.

# புதுவருடத்துக்கு பின் பொதுஜன பெரமுன கட்சிக்கு புதிய தலைவர்

**அக்குறணை குறூப் நிருபர்**



புதுவருடப்பிறப்பை அடுத்து ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கு புதிய தலைவர் ஒருவர் நியமிக்கப்பட உள்ளதாக கண்டி மாவட்டப் பாராளுமன்ற, உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

கண்டியில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்,..

தற்போது மகிந்த ராஜபக்ச ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவராகச் செயற்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

காகம் கட்டிய கூட்டில் குயில் முட்டையிடுவது போல் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரும் பொதுஜன பெரமுனயின் உதவியைப் பெற்று பாராளுமன்றப் பிரவேசம் பெற்றனர்.

இன்று அதனை மறந்து விட்டனர்.

ஆனால் குயில் மீண்டும் முட்டையிட காகத்தின் கூடுகளை நாடுவது போல் இவர்களும் அடுத்த தேர்தலில் போட்டியிட பொதுஜன பெரமுன கட்சியை நோக்கி வருவர் என்றும் குறிப்பிட்டார்.

Lanka Salt Ltd.

# பெறுகை அறிவித்தல்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### கணனிகள் மற்றும் CCTV கமரா உட்பட அது தொடர்பான ஏனைய கூறுகளை வழங்குதல்

பின்வரும் பொருட்களை வழங்குவதற்காக லங்கா சோல்ட் லிமிடெட்டினால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| உருப்படி இல. | விலைக்கோரல் இல. | உருப்படி | தேவையான எண்ணிக்கை | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா (ஆவணக் கட்டணம்) |
|---|---|---|---|---|
| 1 | LSL/NCB/Laptop/06/23 | மடிக் கணனிகள் | 10 | 1,500.00 |
| 2 | LSL/NCB/Desktop/06/23 | மேசைக் கணனிகள் | 10 | 1,500.00 |
| 3 | LSL/NCB/CCTV/06/23 | CCTV கமரா (அது தொடர்பான ஏனைய கூறுகள் உட்பட) | 40 | 1,500.00 |

(மேற்கூறப்பட்ட உருப்படிகளுக்கான விபரக்குறிப்புகள் விலைக்கோரல் ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன)

இறக்குமதியாளர்கள், நியமன பிரதிநிதிகள்/ உற்பத்தியாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர் விநியோகஸ்தர்கள் மட்டுமே இந்தப் பெறுகையில் பங்குபற்றத் தகுதியானவர்கள்.

மேற்கூறப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்திற்கான பற்றுச்சீட்டு சகிதம் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் 2023 மே மாதம் 03 வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் ஹம்பாந்தோட்டை, மஹாலேவய, லங்கா சோல்ட் லிமிடெட், பெறுகை மற்றும் லொஜிஸ்டிக் முகாமையாளர் அல்லது நாவல, இல. 44/5, நாராஹென்பிட்டி வீதி, சேவை செயலக அலுவலகத்திலிருந்து மேற்கூறப்பட்ட பொருட்களுக்கான விபரக்குறிப்புகள் உட்பட விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கொடுப்பனவுகளை ஹம்பாந்தோட்டை, மஹாலேவய, லங்கா சோல்ட் லிமிடெட், காசாளர் கருமபீடத்திற்கு அல்லது நாவல, சேவை செயலக அலுவலகத்திற்கு வேலை நாட்களில் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம் அல்லது ஹட்டன் நெஷனல் வங்கியின் எந்தவொரு கிளையிலும் லங்கா சோல்ட் லிமிடெட்டால் ஹம்பாந்தோட்டை கிளையில் பேணப்படும் 0680010003183 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைத்தல் வேண்டும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களை 2023 மே 04ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபால் மூலம் அல்லது கூரியர் சேவை மூலம் லங்கா சோல்ட் லிமிடெட், இல. 44/5, நாராஹென்பிட்டி வீதி, நாவல எனும் முகவரியிலுள்ள சேவை செயலக அலுவலகத்திற்கு ஒப்படைத்தல் வேண்டும் அல்லது நாவல, இல. 44/5, நாராஹென்பிட்டி வீதி, லங்கா சோல்ட் லிமிடெட் சேவை செயலக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள ''02ஆம் இலக்க கேள்விப் பெட்டியில்'' உள்ளிடுதல் வேண்டும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விலைக்கோரல் இலக்கம் மற்றும் உருப்படியின் விபரம் என்பன குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். 2023 மே 04ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தல் நேரத்தில் பின் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும்.

- விலைமனுதாரர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் விலைமனுக்கள் திறக்கும் வேளையில் கலந்துகொள்ளலாம்.
- பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**லங்கா சோல்ட் லிமிடெட்,**
**மஹாலேவய, ஹம்பாந்தோட்டை.**

**தொ.பே. 047-2037328 / 047-2037329 / 047-2037330 / 047-2037331**
**பொது இலக்கம்: 047-2220208**
**தொலைநகல்: 047-2220340**
**மின்னஞ்சல்: supplylsl@sltnet.lk**

# தேசிய வைத்தியசாலை – கண்டி

கண்டி தேசிய வைத்தியசாலைக்கு பொலிதின் குப்பை உறைகளைக் கொள்வனவு செய்து கொள்வதற்குத் தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து பிராந்திய பெறுகைக்கழுத் தலைவரினால் கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளைத் திறத்தல் 2023.05.04 அன்று மு.ப. 10.30 இற்கு மேற்கொள்ளப்படுவதனால் அன்றைய தினம் மு.ப. 10.30 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கேள்விகளை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். கேள்விகள் தலைவர், பிராந்தியப் பெறுகைக்குழு, தேசிய வைத்தியசாலை கண்டி' என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்படலாமென்பதுடன் நேரடியாக ஒப்படைப்பதானால் பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் முத்திரையிட்டு வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் குறித்த நேரத்திற்கு முன்னர் உள்ளிடலாம். கேள்விகள் உள்ளடக்கப்படும் உறைகளின் கேள்விகள் உள்ளடக்கப்படும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் கேள்விகள் திறக்கப்படும் திகதி மற்றும் 'பொலிதின் குப்பை உறைகள்' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

| | உருப்படி | நிறம் | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | பொலிதின் குப்பை உறைகள் (Garbage Bags) | மஞ்சல் நிறம் | 48'' x 28'' + 8" gauge 150 | 42000 |
| 2 | | | 30'' x 18'' + 6" gauge 150 | 42000 |
| 3 | | செம்மஞ்சல் நிறம் | 48'' x 28'' + 8" gauge 150 | 27000 |
| 4 | | | 30'' x 18'' + 6" gauge 150 | 27000 |
| 5 | | பச்சை நிறம் | 48'' x 28'' + 8" gauge 150 | 29500 |
| 6 | | | 30'' x 18'' + 6" gauge 150 | 18000 |
| 7 | | நீல நிறம் | 48'' x 28'' + 8" gauge 150 | 20000 |
| 8 | | | 30'' x 18'' + 6" gauge 150 | 20000 |
| 9 | | கறுப்பு நிறம் | 48'' x 28'' + 8" gauge 150 | 30000 |
| 10 | | | 30'' x 18'' + 6" gauge 150 | 30000 |
| 11 | | ஊதா நிறம் | 48'' x 28'' + 8" gauge 150 | 300 |
| 12 | | | 30'' x 18'' + 6" gauge 150 | 300 |

1. கேள்விப்படிவங்களைப் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 3,000.00 இற்கான மீளளிக்கப்படாத கேள்விக்கட்டணமொன்று கண்டி தேசிய வைத்தியசாலையின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியுடன் வியாபாரப்பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும். 2023.04.12 முதல் 2023.05.03 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 2.30 வரை கண்டி தேசிய வைத்தியசாலையின் கணக்குப்பிரிவில் இதற்கான கேள்வி மாதிரிப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம் இதற்கான, பிரதிநிதியொருவர் சமுக மளிப்பதாயின் விண்ணப்பதாரரின் அதிகாரமளிக்கப் பெற்ற கடிதமொன்று மற்றும் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
2. கேள்விப் படிவங்களைப் பெற்றுக் கொள்ள முன்னர் கண்டி தேசிய வைத்தியசாலையின் கணக்குப்பிரிவில் அவற்றை இலவசமாகப் பரிசீலனை செய்து கொள்ளலாம்.
3. கண்டி தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளரின் பெயரில் ரூபா 150,000.00 பெறுமானமுள்ள மற்றும் கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 180 நாட்கள் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள கேள்விப் பிணையமொன்று கேள்விகளின் மூலப் பிரதியுடன் இணைத்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
4. கேள்வியின் மொத்தத் தொகையானது ஐந்து மில்லியன் (5,000,000.00) ரூபாவிற்கு மேற்படும் சமயத்தில் 1987 இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்திற்கமைவாக பொது ஒப்பந்தங்கள் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப் பெற்று அச்சான்றிதழின் மூலப்பிரதியானது கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

   ஒப்பந்த இலக்கம்: NHK/FA/04/2023-02
5. கேள்வி மாதிரிப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்புக்களிற்கமைவாக கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
6. 2023.05.04 அன்று மு.ப. 10.30 இற்கு கேள்விகள் மூடப்பட்டதும் உடனடியாக அவை கண்டி தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் அலுவலகத்தில் திறக்கப்படும். அவ்வேளையில் விண்ணப்பதாரர் அல்லது அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம். இதற்காக பிரதிநிதியொருவர் சமுகமளிப்பதாயின் விண்ணப்பதாரரின் அதிகாரம் அளிக்கப் பெற்ற கடிதம் ஒன்று மற்றும் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய அடையாள அட்டை சமர்ப்பிக்கபடல் வேண்டும்.
7. தேசிய போட்டி ரீதியிலான (NCB) முறைமையின் கீழ் இக் கேள்விகள் கோரப்படும்.
8. கண்டி தேசிய வைத்தியசாலையின் பிராந்தியப் பெறுகைக் குழுவின் தீர்மானம், இறுதித்தீர்மானமாக அமையும் என்தனை கேள்விதாரர் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

**தலைவர், பிராந்தியப் பெறுகைக்குழு,**
**தேசிய வைத்தியசாலை - கண்டி.**

## இலங்கை அரசாங்கம்

# நீர் வழங்கல் அமைச்சு

## நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டை மேம்படுத்தும் செயற்றிட்டம்

**கடன் இல. Cr. 5685-lk & 9255-lk**

# விலைக்கோரல் அறிவித்தல்

1. இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம் உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி முகவரகத்திடமிருந்து நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டை மேம்படுத்தும் செயற்றிட்டத்திற்காக கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடனின் ஒரு பகுதியை பின்வரும் ஒப்பந்தங்களுக்கு கொடுப்பனவாகச் செய்யவுள்ளது.
2. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்காக தகைமை மற்றும் தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை பெறுகைக் குழுவின் தவிசாளர் இத்தால் அழைக்கின்றார்.

| ஒப்பந்தப் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவைப்படும் கேள்விப் பிணை முறி | தகைமை தேவைப்பாடுகள் | ஆவணங்கள் வழங்குமிடம் மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய நபர் | மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| **செயற்றிட்டப் பெறுகைக் குழு (மேல்நிலை)** | | | | | |
| **வேலைக் கேள்விகள்** | | | | | |
| குருநாகல் மாவட்டத்தில் ஹிரிபிட்டிய கிராமிய நீர் வழங்கல் திட்டத்தை நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல.<br>**MWS/WaSSIP/KU/NEW/NCB /Hiripitiya/ AF/2022/02** | ரூபா 20,000/- | ரூபா 1,788,000/- | C3 அல்லது C4 தரத்தில் CIDA நிறுவனத்தில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் துறையின் பதிவு மற்றும் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் சான்றிதழ் மற்றும் அடுத்தடுத்த வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2018-10-16ஆம் திகதி சிலோன் டெய்லி நியூசில் பிரசுரமான பத்திரிகை விளம்பரம் | செயற்திட்ட பணிப்பாளர் அலுவலகம்,<br>நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டம்,<br>இல. 230, ஈ.டபிள்யூ. பெரேரா மாவத்தை,<br>ஜுபிலி போஸ்ட், நுகேகொடை.<br>தொ.பேசி/ தொ.நகல்: 011-2890943/ 011-2890941 | 2023 மே 10ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு |
| கேகாலை மாவட்டத்தில் நெலுந்தெனிய பிரதேசத்திலுள்ள கிளை வீதிகளுக்கு HDPE/DI குழாய்கள், பொருத்தல்கள், வால்வுகள், விசேடங்கள் மற்றும் துணைப்பாகங்களை பதித்தல்<br>ஒப்பந்த இல.<br>**MWS/WaSSIP/Kegalle/ Urban/ NCB/PIPE LAYING-NELUNDENIYA/AF/2022/ 08** | ரூபா 20,000/- | ரூபா 1,740,000/- | C3 அல்லது C4 தரத்தில் CIDA நிறுவனத்தில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் துறையின் பதிவு மற்றும் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் சான்றிதழ் மற்றும் அடுத்தடுத்த வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2018-10-16ஆம் திகதி சிலோன் டெய்லி நியூசில் பிரசுரமான பத்திரிகை விளம்பரம் | செயற்திட்ட பணிப்பாளர் அலுவலகம்,<br>நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டம்,<br>இல. 230, ஈ.டபிள்யூ. பெரேரா மாவத்தை,<br>ஜுபிலி போஸ்ட், நுகேகொடை.<br>தொ.பேசி/ தொ.நகல்: 011-2890943/ 011-2890941 | 2023 மே 10ஆம் திகதி ந.ப. 12.00 மணிக்கு |
| நுவரெலியா மாவட்டத்தில் ஹோப் மற்றும் மடுல்ல கிராமிய நீர் வழங்கல் திட்டத்தின் விநியோகத்தை விஸ்தரித்தல்<br>ஒப்பந்த இல.<br>**MWS&EID/WaSSIP/NUWARAELIYA/BW / NCB/ HOPE-BALANCE/2022/14** | ரூபா 20,000/- | ரூபா 1,596,000/- | C3 அல்லது C4 தரத்தில் CIDA நிறுவனத்தில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் துறையின் பதிவு மற்றும் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் சான்றிதழ் மற்றும் அடுத்தடுத்த வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2018-10-16ஆம் திகதி சிலோன் டெய்லி நியூசில் பிரசுரமான பத்திரிகை விளம்பரம் | செயற்திட்ட பணிப்பாளர் அலுவலகம்,<br>நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டம்,<br>இல. 230, ஈ.டபிள்யூ. பெரேரா மாவத்தை,<br>ஜுபிலி போஸ்ட், நுகேகொடை.<br>தொ.பேசி/ தொ.நகல்: 011-2890943/ 011-2890941 | 2023 மே 10ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு |
| **பொருட் கேள்விகள்** | | | | | |
| Infilling செயற்றிட்டங்களுக்கு O&M உபகரணங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல.<br>MWS&EID/WaSSIP/PDO/NCB/O&M Equipment/ AF/2022/12 | ரூபா 12,500/- | பில் இல. 01: ரூபா 48,000.00<br>பில் இல. 02: ரூபா 57,000.00<br>பில் இல. 03: ரூபா 96,000.00<br>பில் இல. 04: ரூபா 166,000.00<br>பில் இல. 05: ரூபா 35,000.00 | O & M உபகரணங்களை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் சான்றிதழ் மற்றும் அடுத்தடுத்த வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2018-10-16ஆம் திகதி சிலோன் டெய்லி நியூசில் பிரசுரமான பத்திரிகை விளம்பரம் | செயற்திட்ட பணிப்பாளர் அலுவலகம்,<br>நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டம்,<br>இல. 230, ஈ.டபிள்யூ. பெரேரா மாவத்தை,<br>ஜுபிலி போஸ்ட், நுகேகொடை.<br>தொ.பேசி/ தொ.நகல்: 011-2890943/ 011-2890941 | 2023 மே 11ஆம் திகதி பி.ப. 12.30 மணிக்கு |

3. செயற்றிட்ட பணிப்பாளர் அலுவலகத்திற்கு விண்ணப்பதாரரின் கடிதத் தலைப்பில் ஆவணங்களுக்கான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.
4. சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 3.30 மணிக்குமிடையில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்பாட்டு செயற்றிட்டத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படுமிடங்களில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. கேள்விகளை ஒன்றில் நேரடியாகக் கையளிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அல்லது தூதஞ்சல் மூலம் அனுப்பலாம்.
7. சகல கேள்விகளும் சமுகமளித்திருக்கும் கேள்விதாரர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டை மேம்படுத்தும் செயற்றிட்டம்.**

**நீர் வழங்கல் தொடர்பான அவசர அழைப்புகளுக்காக 1939 எனும் இலவச இலக்கம் 24 மணி நேரமும் உங்களுக்காக செயற்படும்.**
**சமூக நீர் திட்டங்களின் சிக்கல்களுக்கு 1914 எனும் எண்ணைத் தொடர்புகொள்ளவும்.**

## பிஸ்கல் ஏலத்தில் விற்பனை
## மாவட்ட நீதிமன்றம் குருநாகல்

வழக்கு எண்: 1818/அடகு

மக்கள் வங்கி,
இல.75, ஸ்ரீமத் சித்தம்பலம் ஏ.கார்டினர் மாவத்தை,
கொழும்பு 02

**வாதி**

எதிர்

2. நெய்னா முஹம்மது முஹம்மது முனா·ஃப் இல.67, தம்புள்ளவீதி, தோரயாய, குருநாகல்.
2. முகமது ஜலீல் ஸதிகாபேகம், இல.67 தம்புள்ளவீதி, தோரயாய, குருநாகல்.

பிரதிவாதிகள்

மேற்படி இலக்கம் கொண்ட வழக்கில் 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆந் திகதியிட்ட குருநாகல் மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி, மேலே பெயர் குறிப்பிட்ட பிரதிவாதிகளான நெய்னா முஹம்மது முஹம்மது முனா·ஃப் மற்றும் மொஹமட் ஜலீல் ஸாதிகாபேகம் ஆகியோர் மக்கள் வங்கிக்கு முப்பத்தொன்பது இலட்சத்து நாற்பத்து மூவாயிரத்து இருபத்தாறு ஒரு சதம் (ரூ.3,94,3026.01, 026/01) ரூபாவை மற்றும் அத்தொகைக்கு 01.01.2016 முதல் 29.06.2016 வரை 12.5% வீதத்தில் வட்டித் தொகையையும் 29.11.2019 முதல் முழுமையான தொகையை செலுத்தும் தினம் வரை சட்டரீதியான வட்டித்தொகையையும் நீதிமன்றக் கட்டணத் தொகையையும் செலுத்த வேண்டும் என்று உத்தரவிட்டு தீர்ப்புகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

மேலும், மேற்படி பிரதிவாதிகள் அப்பணத்தை முறையாக செலுத்த தவறியதால், குறித்த வழக்கில் எனக்கு வழங்கப்பட்ட மேலதிக அதிகாரத்தின் அடிப்படையில், பின்வரும் அட்டவணையில் அசையாச் சொத்தின் மீதான உரிமைகள் மற்றும் அதற்கு அனைத்தும் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன.

2023ம் ஆண்டு மே மாதம் 03ம் திகதி பி.ப.1.30க்கு, குறிப்பிடப்பட்ட சொத்து அமைந்துள்ள இடத்தில் பொது ஏலத்தில் விற்கப்படும். மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை

வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், வெவுடவில்லி ஹட்பத்து, மஹகல் பொட மெகொட கோரளை, குருநாகல் பிரதேச சபை பிரதேசம், மல்லவப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவு, இலக்கம் 741 நாரம்பொல கிராம சேவகர் பிரிவு, கிரிவவுல எனும் ஊரில் அமைந்துள்ள கொங்கஹகொடுவேஹேன தற்போது தோட்டம் மற்றும் மெதகொங்கஹாகொடுவ" எனப்படும் காணிக்கு 17.01.2015 அன்று அங்கிகரிக்கப்பட்ட/நில அளவையாளர் திரு.டி.எம்.பி.பீ.ரம்புக்வெல்ல அவர்களால் அளவீடு செய்யப்பட்ட வரைபிலுள்ள இலக்கம் 5594, லொட் 1 காணியின் எல்லைகள்.

வடக்கிற்கு : வரைபு இலக்கம் 2614ஏவரைபின்லொட் இலக்கம் 02ஐ கொண்ட 20 அடிஅகலமானவீதி,

கிழக்கிற்கு : இலக்கம் 2614 ஏ வரைபின் லொட் இலக்கம் 01 ஐ கொண்ட சமன் உரிமைகோரும் நிலம்,

தெற்கிற்கு : இலக்கம் 5015 வரைபின் லொட் இலக்கம் 04,

மேற்கிற்கு : இலக்கம் 2614ஏ வரைபின் லொட் இலக்கம் 03ஐ கொண்ட கமகே உரிமைகோரும் நிலம்.

பதினெட்டு பேர்சஸ்கள் கொண்ட எல்லைக்குள் அமைந்துள்ள (ஏ:00 ரூ:00 பர்:18) பெரிய நிலம் மற்றும் அதில் உள்ள அனைத்து கட்டிடங்கள், மரங்கள், பழங்கள், மற்றும் அவ்வரைபில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகளின் பொதுவான பயன்பாடு மற்றும் பராமரிப்பு உரிமை

**இக்காணி குருநாகல் காணிப்பதிவாளர் அலுவலகத்தில் ஜே 73/102 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.**

**சொத்தின் அமைவிடம்.**

குருநாகல் மக்கள் வங்கி கிளையிலிருந்து தம்புள்ளை வீதியில் தம்புள்ளை நோக்கி சுமார் 7 கி.மீதொலைவில், கிரிவவுல சந்தியின் இடது புறத்திலுள்ள பல்லேஹவத்தை வீதியில் சுமார் 200 மீட்டர் செல்லும்போது இடதுபுறத்தில் சந்திக்கும் இரண்டாவது குறுக்குப்பாதையில் 20 மீற்றருக்குப் பின் இடதுபுறத்தில் தொடர்புடைய சொத்து அமைந்துள்ளது.

**பணம் செலுத்தும் முறை**

ஏலம் முடிந்த உடனேயே, வெற்றிகரமாக வாங்குபவர் (I) வாங்கிய விலையில் 25%மும், (II) பிஸ்கல் கட்டணம் சிவில் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு இலக்கம் 258இன் படி பிஸ்கல் கட்டணம் மற்றும் (III) விற்பனைக்கான அனைத்து செலவுகளையும் பணமாக செலுத்த வேண்டும். மீதமுள்ள 75% கொள்முதல் விலையை விற்பனை செய்யப்பட்ட தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும்.

**2023 ஆம் ஆண்டு 03 மாதம் 31 ம் திகதி**

**பதிவாளர் துணைபிஸ்கல்**
**மாவட்ட நீதிமன்றம், குருநாகல்.**

---

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
சுற்றாடல் மற்றும் வனசீவராசிகள் வளங்கள் அமைச்சு
**வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்**

## கேள்வி அழைப்பு

### உடவலவ "எத் அத்துரு செவன மற்றும் கிரிதலே விலங்குகள் வைத்தியசாலையில் யானைக் குட்டிகளுக்கு பால்மா கொள்வனவு செய்தல்

WL/2/17/89/Milk/2023

வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் திணைக்கள பெறுகைக்குழுவின் தலைவரால் உடவலவ எத் அத்துரு செவன மற்றும் கிரிதலே யானைக் குட்டிகளுக்கு பால்மாவை 2023 ஆம் ஆண்டிற்கு கீழக்காணுமாறு கொள்வனவு செய்வதற்கு தகைமையுள்ள மற்றும் அதற்காக ஆர்வம் காட்டுகின்ற உற்பத்தியாளர்கள் மற்றும் உள்ளூர் பிரதிநிதிகளிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.


| லொட் இல | உருப்படி | இடம் | மாதாந்தம் வழங்க வெண்டிய அளவு Kg | 2023 மே 01 முதல் 2024.02.29 வரை Kg |
|---|---|---|---|---|
| A | சிறுவர் பால்மா சூத்திர மட்டம் II (Infant formula stage II) | உடவலவ | 2670 | 26699.75 |
| | | கிரிதலே | 138 | 1372.50 |

01. கேள்விகோரல் தேசிய போட்டி கேள்விகோரலின் கீழ் இடம்பெறும்
02. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு கேள்வி ஆவணங்களை 2023.05.02 வரை அரச வேலை அலுவலக நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.2.00 வரை பத்தரமுல்ல, வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கணக்குப்பிரிவில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.
03. கேள்வி ஆவணங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மு.ப.9.00 முதல் பி.ப.2.00 வரை 2023.05.02ம் திகதி வரை வன சீவராசிகள் பணிப்பாளர் நாயகம், வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் பெயரில் மேற்கொள்ளப்படும் எழுத்து மூல வேண்டுதலுடன் காசாக 26,950.00 மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்திய பின்பு பெற்றுக்கொள்ளலாம்.
04. கேள்வி ஆவணங்களுடன் ரூ.1,777,925.00 பிணையொன்றை சமர்ப்பிப்பதுடன் அதனை கேள்வி ஆவணங்களில் உற்படுத்தி மாதிரியின் பிரகாரம் அரச அனுமதித்த வர்த்தக வங்கியிலிருந்து அல்லது வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் காசாளரிடம் 2023.05.03ம் திகதி பி.ப.2.00 இற்கு முன்பு காசு செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். கேள்வி ஆவணங்களுடன் கேள்விப்பிணையை சமர்ப்பித்திராத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
05. கேள்விப் பிணைமுறி கேள்வி திறக்கப்படும் தினம் முதல் குறைந்தபட்சம் 90 நாட்களுக்கு செல்லுபடியாதல் வேண்டும்.
06. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென வேறுவேறாக கடித உறைகளில் இடப்பட்டு பொறியிட்டு மீண்டும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தைக் குறிப்பிட்டு 2023.05.03 பி.ப.2.00 இற்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விகள் உள்ளிடும் பெட்டியில் உள்ளிட முடியும் அத்துடன், தாமதமாகக் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும் அதற்காக உங்களுக்கு அல்லது உங்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
07. கேள்விப் பத்திரங்கள் பற்றிய விபரங்களை 0112-871537 தொ.பே மூலம் திணைக்கள உதவிப் பணிப்பாளர் (நிதி) ஐ அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.
08. கேள்விப் பத்திரங்கள் பற்றிய தீர்மானம் எடுக்கும் உரிமை திணைக்கள பெறுகைக் குழுவிற்கு உரித்தாவதுடன், இவ் அறிவித்தலில் அல்லது கேள்வி மாதிரிகளில் குறிப்பிடப்படும் அல்லது குறிப்பிடப்படாத இப்பெறுகை விடயங்களுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் விடயம் பற்றிய தீர்மானம் எடுக்கும் உரிமை வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரியது.
09. கேள்விப் பத்திரங்கள் தயாரித்தல் பற்றி ஏற்படும் எந்த செலவினங்கள் சம்பந்தமாகவும் தலைவர், அத்திணைக்கள பெறுகைக்குழுவினால் பொறுப்புக்கூறப்பட மாட்டாது.


**தலைவர்**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்**
**இல - 811/ஏ, ஜயந்திபுர, பத்தரமுல்ல**


---

# சிறு விளம்பரம்





122

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**
விற்பனைக்கு

SG YO - 5290 Bajaj, 2011, CP QL - 444 9 Bajaj, 2007, WP YR - 4728 Bajaj, 2011, threewheel. கூடிய விலைக் கோரிக்கைக்கு, வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல.310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0711 210810. 022752



325

**தொழில்துறை**
பொது

கொழும்பு பிரதேசத்தில் வேலை செய்வதற்கு ஆண், பெண் பாதுகாப்பு அலுவலர்கள் தேவை. 0771060667 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். 022535

---

### அறிவித்தல்

**2007ஆம் ஆண்டின் 7ஆம் இக்க கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

கம்பனியின் பெயர்:
**ஏ.பி.எஸ். டெக்னாலஜிஸ் (பிரைவட்) லிமிட்டட்**
கம்பனியின் முகவரி:
**இல. 30, W.A. ஹேனவத்த, ஹக்மன வீதி, திஹகொட.**
கூட்டிணைப்புத் திகதி:
**25.05.2021**
**கம்பனியின் இலக்கம்:**
**PV 00240098**

**கல்ப துஷாரக பெரேரா**
**கம்பனிச் செயலாளர்**
**இல. 240/A/5, கல்கடே சந்தி, வெல்மில்ல, பண்டாரகம.**

---

### அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்
கம்பனியின் பெயர்:
**சினடிக்ஸ் சிஸ்டம்ஸ் (பிரைவட்) லிமிட்டட்**
கம்பனியின் முகவரி :
**இல. 104/24, ராகுல வீதி, மாத்தறை**
கூட்டிணைப்புத் திகதி:
**24.11.2021**
கம்பனியின் இலக்கம்:
PV**00248843**

**கல்ப துஷாரக பெரேரா**
**கம்பனிச் செயலாளர்**
**இல. 240/A/5, கல்கட சந்தி, வெல்மில்ல, பண்டாரகம.**

---

**ஸ்கில்ஸ் இன்டர் நெஷனல் (பிரைவட்) லிமிட்டட்**
**கம்பனி இல. பிவி 19166**
**கூறப்பட்ட மூலதனத்தின் குறைப்பு**

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(1)ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக் கமைவாக இந்த அறிவித்தலின் பிரசுரித்தலின் அறுபது நாட்களுக்குப் பின்னர் பங்குதாரர் களினால் தீர்மானிக்கப்படும் சிறப்பு தீர்மான மொன்றின் மூலம் வழங்கப்பட்ட மற்றும் முழுமையாக பணம் செலுத்தப்பட்ட பங்குகளுக்கு எவ்வித மாற்றங்களையும் விளைவிக்காமல் பதினேழு கோடியே இருபது இலட்சத்திலிருந்து (172,000,000 ரூபா) அறுபத்திநாலு இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து ஐந்நூற்று அறுபத்தொன்பதும் எண்பத்தி எட்டு சதத்திற்கு (6,432,569.88 ரூபா) அதனது கூறப்பட்ட மூலதனத்தை குறைப்பதற்கு ஸ்கில்ஸ் இண்டர் நெஷனல் (பிரைவட்) லிமிட்டட் உத்தேசித்துள்ளதென 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2)ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

**சபையின் கட்டளைப் பிரகாரம்,**
**கோப்பரேட் ஆர்கேட் எல்டிட**
**கம்பனிக்கான செயலாளர்கள்.**

---

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

மின்சார பாவனையாளர்களுக்கு வினைத்திறனான வழங்கல் மற்றும் சேவையை வழங்கும் நோக்கத்தைப் பூர்த்தி செய்வதற்கு, இலங்கை மின்சார சபை பாவனையாளர் சேவை நிலையங்கள் / மாகாணங்கள் / பிரதேசங்கள் QR குறியீட்டில் சேர்க்கப்பட்டுள்ள திகதிகள் மற்றும் நேரங்களில் மின்சாரம் தடைப்படும். இதனால் மின்சார பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு வருத்தத்தைத் தெரிவிப்பதோடு திட்டமிடப்பட்ட வேலைகள் நிறைவடைந்தவுடன் மீண்டும் மின்சார வழங்கலை வழமைக்குக் கொண்டுவர இலங்கை மின்சார சபை நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

## மின்சாரத் தடை அறிவித்தல் - ஏப்ரல் 2023

மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து www.ceb.lk எனும் எமது உத்தியோகபூர்வ இணையதளம் அல்லது CEB Care எனும் செயலியைப் (App) பார்க்கவும். அல்லாவிடில் பின்வரும் QR குறியீட்டை Scan செய்யுங்கள். மின்சாரம் தடைப்படும் திகதி மற்றும் நேரங்கள் தொடர்பில் பாவனையாளர்களுக்கு தனிப்பட்ட முறையில் குறுஞ்செய்தி (SMS) மூலம் அறியத்தரப்படும்.

பொது முகாமையாளர்,
**இலங்கை மின்சார சபை,**
**இல. 50, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு 02.**

***வளமான வாழ்விற்கு மின்சாரம்.....***

**நீங்கள் இப்போது உங்கள் மின்சார கட்டணங்களை www.ceb.lk எனும் இணையதளத்தில் செலுத்தலாம்.**

---




---

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

## பச்சை தேயிலைக் கொழுந்து/ இறப்பர் பால் விலைமனுக்கோரல் முறைமையின் கீழ் விற்பனை செய்தல்

**மே - ஜூன் 2023**

**விலைமனு இலக்கம் : SLSPC/PL/Green Leaf/T-70-80/2023**

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான, கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களிலுள்ள பின்வரும் தோட்டங்களின் பச்சை தேயிலைக் கொழுந்து இரண்டு மாதங்களிற்கு விற்பனை செய்வதற்காக விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

| பெருந்தோட்டத்தின் பெயர் | விலைமனு இலக்கம் | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|
| அலகொல அரச பெருந்தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-70/2023 | 100,000/- |
| கொட்டகஹ அரச பெருந்தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-71/2023 | 100,000/- |
| கல்பிஹில்ல அரச பெருந்தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-72/2023 | 100,000/- |
| ரங்கல அரச பெருந்தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-73/2023 | 50,000/- |
| ஹாகல அரச பெருந்தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-74/2023 | 100,000/- |
| ஹெயாபார்க் அரச பெருந்தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-75/2023 | 100,000/- |
| ஹுன்னஸ்கிரிய அரச பெருந்தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-76/2023 | 100,000/- |
| விஹாரகல அரச பெருந்தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-77/2023 | 50,000/- |
| வைத்தலாவ அரச பெருந்தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-78/2023 | 100,000/- |
| வுட்சைட் அரச பெருந்தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-79/2023 | 100,000/- |
| இறப்பர் பால் (LATEX) | | |
| வலஹன்துவ அரச பெருந்தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-80/2023 | 50,000/- |

இதற்கான நிபந்தனைகளுடன் கூடிய ஆவணங்களை ரூபா 5,000/- இற்கான தொகையைச் செலுத்தி 2023.04.17 முதல் 2023.04.26 அன்று பி.ப. 4.00 வரை பன்விலவில் அமைந்துள்ள இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பிராந்திய அலுவலகத்தில் அல்லது 2023.04.17 முதல் 2023.04.27 அன்று பி.ப. 12.30 வரை இல: 257, சிரிதம்ம மாவத்தை, கொழும்பு 10 இலுள்ள இஅபெகூ பிரதான அலுவலகத்திலும் கொள்வனவு செய்து கொள்ளலாம்.

மீளளிக்கப்படும் வைப்புத் தொகையை ஒவ்வொரு பெருந்தோட்டத்திற்கும் தனிதனியாக வைப்பிலிடுதல் வேண்டுமென்பதுடன், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் மக்கள் வங்கி முதல் நகரக் கிளையின் கணக்கு இலக்கம் 0461002 40000 933 இல் வைப்புச் செய்தல் அல்லது காசாளரிடம் செலுத்திப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் பற்றுச்சீட்டின் பிரதியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் படிவங்கள் வைப்புப் பற்றுச் சீட்டுகளுடன், கொழும்பு 10, இல. 257, சிரிதம்ம மாவத்தயிலுள்ள இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2023.04.27 அன்று பி.ப. 1.00 இற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் கேள்விதாரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்து இடுவதற்கு முன்னர், இலங்கையில் அங்கீகாரம் பெற்றுள்ள வங்கியொன்றினால் வழங்கப்பட்ட உரிய மாதத்திற்காக கணிக்கப்பட்ட சூத்திரத்திற்கமைவாக விதிக்கப்படும் பெறுமானத்திற்கு 03 மாதங்கள் செல்லுபடிக்காலம் கொண்ட வங்கிப் பிணையமொன்று சமர்ப்பித்தல் கட்டாயமாகும்.

2023.04.27 அன்று பி.ப. 01.00 இற்கு கேள்விகள் மூடப்பட்டு உடனடியாக, அவை கேள்விகள் திறக்கும் குழு முன்னிலையில் திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் கொள்வனவாளர் அல்லது அவரின் பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் தொடர்பில் கூட்டுத்தாபனம் பொறுப்புக்கூறமாட்டாதென்பதுடன், பெறுகைக் குழுத் தலைவரின் தீர்மானம் இறுதித்தீர்மானமாக அமையும்.

**தலைவர்- பெறுகைக் குழு,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 257, சிரிதம்ம மாவத்தை, கொழும்பு-10.**

2023.04.11

# அனைவர் வாழ்விலும் வளமும் நலமும் கிடைத்திட இறை பிரார்த்தனை செய்வோம்

**கலாநிதி. சிவஸ்ரீ. கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**



ஒரு தமிழ் ஆண்டு என்பது வானியல் ரீதியாகவும் அறிவியல் ரீதியாகவும் அளவிடப்பட்ட காலத்தைக் கொண்ட காலப்பகுதியாகும். பூமி, சூரியனை ஒரு தடவை சுற்றிவர 365 நாட்கள், 6 மணி, 11 நிமிடம், 48 நொடிகள் ஆகின்றது.

இதுவே தமிழ் வருடத்தினதும் கால அளவாகும். சூரிய மேச இராசியில் பிரவேசிக்கும்போது தொடங்கும் ஆண்டு, மீன இராசியிலிருந்து வெளியேறும்போது முடிவடைகின்றது.

ஆகவே தமிழ் வருடத்தின் கால அளவு எப்போதும் சீரானதாகவே இருக்கிறது. இதன் அடிப்படையிலேயே தமிழ்ப் புத்தாண்டு பிறக்கும் நாள், நேரம் கணிக்கப்படுகிறது.

சோபகிருது எனும் மங்கலநாமத்துடன் புதிய வருடம் உதயமாகிறது. இவ்வருடம் எமது மக்களினதும் ஏனைய சமூகத்தினதும் அனைத்து இடர்களும் நீங்க வேண்டும். ஒவ்வொருவரினதும் சமூகத்தினதும் தனித்துவம், வழிபாட்டு சுதந்திரம், கருத்துச்சுதந்திரம், பண்பாட்டு விழுமியங்கள் மதித்து பேணப்பட வேண்டும்.

இவ்வாறான நிலை பேணப்பட்டு அனைவர் வாழ்விலும் வளமும் நலமும் பலமும் பெற்று சுபீட்சமான இன்ப வாழ்வும் வளர்ச்சியும் உயர்ச்சியும் பெற்று நிலைக்க வேண்டும் என அன்பே உருவான பரம்பொருளை வேண்டி பிரார்த்தனை செய்து மனமார்ந்த நிறைந்த நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் பகிர்ந்து மகிழ்கின்றோம்.

## மருதமுனை சுனாமி...

முதலில் பயனாளிகளுக்கு வழங்கி, நாட்டின் பொருளாதார நிலமை ஓரளவு சீராகியதும் அரச நிதியில் அவற்றை புனருத்தாபனம் செய்யலாமென ஒருங்கிணைப்பு குழு தலைவர் முஷாரப் கூறினார்.

இதன் பயனாக வாக்குறுதியளித்தபடி நேற்று முன்தினம் (10) வீட்டுத்திட்டம் கையளிக்கப்பட்டது.

கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி தலைமையில் நேற்று முன்தினம் (10) கல்முனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம அதிதியாக சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் எம்பி கலந்துகொண்டு பயனாளிகளுக்கு வீடுகளை கையளித்தார்.

## பொருளாதாரத்தை...

வொஷிங்டனுக்கு சென்றுள்ள இராஜாங்க அமைச்சரிடம் இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

உலக வங்கி குழுமம் மற்றும் சர்வதேச நாணய நிதியம், லக வங்கியின் செயற்பாட்டு முகாமைத்துவ பணிப்பாளர் அன்னா பிஜெர்டேவை சந்தித்து கலந்துரையாடுகையிலே இவ்வுறுதி அளிக்கப்பட்டது.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியனுடனும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, கலந்துரையாடியுள்ளார்.

இலங்கையின் எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முடிப்பதற்கான நாட்டின் அர்ப்பணிப்பு குறித்து பேசியதாக ஷெஹான் சேமசிங்க கூறினார்.

## அரசின் நிலைப்பாடுகள்...

கொழும்பைத் தளமாகக் கொண்டுள்ள இராஜதந்திரிகளுக்கு இலங்கையின் தற்போதைய முன்னேற்றங்கள் குறித்து விளக்கமளிக்கும் கூட்டம் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தலைமையில் நடைபெற்றது.

இதில்,பொருளாதார மீட்சிக்கு இலங்கைக்கு ஆதரவு வழங்கிய சர்வதேச சமூகத்தினருக்கு அமைச்சர் நன்றி தெரிவித்தார். இது தொடர்பான முன்னேற்றம் குறித்தும் அவர் விளக்கமளித்தார்.

சுற்றுலாப் பயணிகளின் வருகையை மேலும் ஊக்குவிப்பதற்காக நாட்டின் ஸ்திரத்தன்மையை பிரதிபலிக்கும் வகையில், நாடுகளின் பயண ஆலோசனைகளை மறுபரிசீலனை செய்யுமாறும் அமைச்சர் அலிசப்ரி கோரியதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியினால் சர்வகட்சி மாநாடு நடத்தப்பட்டமை மற்றும் நல்லிணக்கத்துக்கான அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டமை உள்ளிட்ட நல்லிணக்கத்துக்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள முயற்சிகளையும் அமைச்சர் எடுத்துரைத்துள்ளார்.

உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறையை அமைப்பதற்கான தற்போதைய முயற்சிகள் குறித்த மேலதிக தகவல்களையும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வழங்கியதாக வெளிவிவகார அமைச்சு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் சுட்டிக்காட்டியுள்ளது.

## ராஜித எம்பியை...

பாராளுமன்ற உறுப்பினர் தொடர்ச்சியாக வெளியிட்டு வந்த கருத்துக்களின் அடிப்படையிலேயே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## இலங்கை மகாவலி அதிகார சபை

### தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23ஆஆ பிரிவின் இரண்டாம் அட்டவணையின் கீழான அறிவித்தல்

### கங்கபிட்டியவத்த, கெங்கல்ல, திகன ஆகிய இடங்களில் நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள ஆடம்பர விலா செயற்றிட்டத்திற்காக சுற்றாடல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கை

1988 இல. 56 மற்றும் 2000 இல. 53 சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 1980 இல. 47 தேசிய சுற்றாடல் சட்டத்தின் இல. 23ஆஆ (1) பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கு அமைவாக இல. 03 டேசி விலா அவெனியூ கொழும்பு -04 முகவரியில் உள்ள கிரிஸ்டல் சொத்துக் கம்பனியுடன் இணைந்த கம்பனியான விக்டோரியா நேவாசிக்க (தனியார்) நிறுவனத்தினால் திகன கெங்கல்ல பிரதேசத்தின் கங்கபிட்டியவத்த என்ற இடத்தில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஆடம்பர விலா செயற்றிட்டம் பற்றி தயாரிக்கப்பட்ட சுற்றாடல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கை இந்த அறிவித்தல் பத்திரிகைகளில் பிரசுரமாகும் தினம் முதல் 30 நாள் கால எல்லைக்குள் மு. ப. 8.30 முதல் பி.ப. 4.15 வரை மக்கள் பரிசீலனைக்காக கீழ்க்காணும் இடங்களில் பார்வைக்காக வைக்கப்படும். (வார இறுதி மற்றும் அரச விடுமுறை தினம் தவிர்த்து)

- பிரதேச செயலகம்
  குண்டசாலை
- பிரதேச சபை
  குண்டசாலை
- மாவட்ட செயலகம்
  கண்டி
- பணிப்பாளர் பணிமனை
  பிரதான ஏரி மற்றும் நீர் செயற்பாட்டு பிரிவு
  இலங்கை மகாவலி அதிகார சபை,
  திகன
- விக்டோரியா செயற்பாட்டு
  பொறியியலாளர் பணிமனை
  பிரதான ஏரி மற்றும் நீர் செயற்பாட்டு பிரிவு
  இலங்கை மகாவலி அதிகார சபை
  அதிகாரிகம
- தேசிய சுற்றாடல் தகவல் நிலையம்
  மத்திய சுற்றாடல் அதிகார சபை
  தலைமையகம், இல. 104,
  டென்சில் கொப்பேகடுவ மாவத்த
  பத்தரமுல்ல.
  இணைய தளம் www.cea.lk
- நூலகம்
  6ஆம் மாடி, இலங்கை மகாவலி
  அதிகார சபை, இல. 500,
  டி.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு -10
  இணைய தளம்
  www.mahaweli.gov.lk
- மத்திய மாகாண அலுவலகம்
  மத்திய சுற்றாடல் அதிகார சபை
  பொல்கொல்ல வாவி அருகில்
  பொல்கொல்ல

இந்த அறிவித்தல் பத்திரிகையில் பிரசுரமான தினம் முதல் 30 நாட்கள் (வார இறுதி மற்றும் அரச விடுமுறை தினம் தவிர்த்து) கால எல்லைக்குள் மேற்படி செயற்றிட்டம் பற்றிய பொது மக்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் இருப்பின் அவற்றை எழுத்து மூலம் இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை மகாவலி அதிகார சபை,**
**500, டி. பி. ஜாயா மாவத்தை,**
**கொழும்பு -10**

## தென் மாகாண சபை

### தென் மாகாண பிரதம செயலாளர் பணிமனை

# கேள்விக்கான அழைப்பு

தென் மாகாண பிரதம செயலாளர் பணிமனை சார்பாக பிரதம செயலாளர் பெறுகைக்குழுவின் தலைவரால் தென் மாகாண பிரதம செயலாளர் பணிமனை மற்றும் அதனோடு இணைந்த நிறுவனங்களுக்கு 2023.06.01 முதல் 2024.05.31 வரை ஒரு வருட கால எல்லைக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடங்களுக்கு சுத்திகரிப்பு சேவைகளை வழங்குவதற்கு போதுமான நிதித் தகைமை மற்றும் குறித்த துறையில் அனுபவமுள்ள நிறுவனங்கள்/ கேள்விதாரர்களிடமிருந்து வேறு வேறாக பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

02. இதற்காக ஆர்வத்தைக் காட்டுகின்ற கேள்வி வைப்பாளர்களுக்கு குறித்த கேள்வி ஆவணங்களை 2023.04.12 முதல் 2023.05.02 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் கீழ்க்காணுமாறு கட்டணங்களைச் செலுத்தி காலி, எஸ். எச் தஹநாயக்க மாவத்தையில் அமைந்துள்ள தென் மாகாண பிரதம செயலாளர் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

| விபரம் | சேவையின் கால எல்லை | கேள்விப் பிணை முறி (ரூ.) | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூ.) |
|---|---|---|---|
| தென் மாகாண பிரதம செயலாளர் பணிமனை, வக்வெல்ல முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிறுவனம், லபுதுவ பிரதம செயலாளர் உத்தியோகபூர்வ இல்லம். தென் மாகாண சபை அங்கத்தவர்களின் உத்தியோகபூர்வ இல்லங்கள் அமைந்துள்ள கட்டிடம், அங்கத்தவர்களின் விடுதிகள், சுற்றிவரவுள்ள வளாகம், ஆளுநரின் செயலாளரின் உத்தியோகபூர்வ இல்லம் அருகிலுள்ள வளாகம் உட்பட லபுதுவ உத்திரோயகபூர்வ இல்ல கட்டிடத்தொகுதி வளாகம் மற்றும் ஹம்பாந்தோட்டை மயுரபுர விடுமுறை இல்லத்திற்கான சுத்திகரிப்புச் சேவையைப் பெற்றுக் கொள்ளல் (SPC/CS/NCB/23/01) | 2023.06.01 - 2024.05.31 வரை | ரூ. 100,000.00 | ரூ. 1000.00 |

03. கேள்வியுடன் சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பிணை முறி இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்த வங்கியிலிருந்து தென் மாகாண பிரதம செயலாளரின் பெயருக்கு பெற்றுக் கொண்ட 2023.08.31 வரை செல்லுபடியாகும் கேள்விப் பிணை முறியொன்றை அல்லது பிரதம செயலாளர் பணிமனையின் கணக்குப் பிரிவிற்கு காசு செலுத்திய பின்பு வழங்கப்படும் நிதிப் பற்றுச் சீட்டின் மூலப்பிரதியை கேள்விப் பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். காசோலைகள் அல்லது வங்கிப் பிணைமுறியாக சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பிணைமுறி நிராகரிக்கப்படும்.

04. சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தத்துடன் சம்பந்தப்பட்ட கேள்விகள் இரு பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்படுவதுடன் அதன் மூலப் பிரதியில் மூலப் பிரதியென குறிப்பிடப்படுவதுடன் நகல் பிரதியில் நகல் பிரதி என குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப்பத்திரங்களில் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியை வேறு வேறாக உறைகளில் இட்டு பொறியிட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு அவ் உறையையும் பொறியிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

05. பொறியிடப்பட்ட விலைமனுப் பத்திரங்களை 2023.05.03 மு.ப. 10.30 இற்கு முன் கிடைக்குமாறு பிரதம செயலாளர் பிரதம செயலாளர் பணிமனை எஸ். எச். தஹநாயக்க மாவத்த காலி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது கையோடு கொண்டு வந்து பிரதம செயலாளர் பணிமனையின் பிரதான பிரவேச கதவுக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள ஆவணத்தில் குறிப்பிட்டு கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி இலக்கம் மற்றும் ‘சுத்திகரிப்பு சேவையை வழங்குவதற்கான விலைமனுக்கள்’ என்று குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் திறத்தல் 2023.05.03ம் திகதி கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் மு.ப. 10.30 இற்கு பிரதம செயலாளர் பணிமனையில் இடம் பெறுவதுடன் அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது கேள்விதாரரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம். தாமதமாக சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

06. பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும் என்பதை தயவுகூர்ந்து கவனிக்கவும்.

**கவனிக்கவும்:** கேள்வி அறிவித்தலை தென் மாகாண பிரதம செயலாளர் பணிமனையின் www.cs.sp.gov.lk இணைய தளத்தில் பார்வையிடலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**தென் மாகாண பிரதம செயலாளர் பணிமனை,**
**எஸ்.எச். தஹநாயக்க மாவத்த,**
**காலி.**

திகதி: 2023.04.10

**தொலைபேசி இல. 091-4944016. 091-4946368**

**பெக்ஸ்: 091-2242697**

**ஈமெயில்: procurementplan1@gmail.com**

## மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏல விற்பனை

### மக்கள் வங்கி - மாத்தளை பிராந்திய தலைமைக் காரியாலயம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள மக்கள் வங்கி மாத்தளை பிராந்திய தலைமைக் காரியாலயத்தின் கிளைகள்/சேவை மையங்களில் 31.12.2021 வரை அடகு வைக்கப்பட்டுள்ள 12.05.2023 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டுப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடக்கம் ஏலத்தில் விற்கப்படும்.

| | | |
|---|---|---|
| ஏல விற்பனை நிகழும் திகதி | 13.05.2023 மற்றும் 14.05.2023 | 13.05.2023 மற்றும் 14.05.2023 |
| ஏல விற்பனை நிகழும் இடம் | மாத்தளை கிளை வளாகம் | தம்புள்ளை கிளை வாளாகம் |
| அடகு வைக்கப்பட்டுள்ள கிளைகள் | மாத்தளை, உக்குவெல, ரத்தோட்ட, பல்லேபொல | தம்புள்ளை, நாவுல, கலேவெல, வில்கமுவ |
| அடகு வைக்கப்பட்டுள்ள சேவை மையங்கள் | திருகோணமலை வீதி, கொங்காவெல, லங்கா பீங்கான் பிரிவு, வறகாமுறை, கைகாவல, யடவத்த | இனாமலுவ, மடாட்டுகம, மடவல உல்பொத்த, தெவஹுவ லக்கல பல்லேகம |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச் செயற்பாட்டை ஒத்தி வைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்,**
**மங்கள் வங்கி,**
**பிராந்திய தலைமைக் காரியாலயம் - மாத்தளை,**
**தொலைபேசி இல. 066-2234212, 066-2222032**

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk

## விலைமனுவிற்கான திருத்தம்

### மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மேல் மாகாணம்)

### மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், வீடமைப்பு மற்றும் நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி – (மேல் மாகாணம்)

| | | |
|---|---|---|
| PE/2023/GA/06 | கழிவு நீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதியின் நிர்மாணம் - வல்பிட்ட | சி-05, சி-06 அல்லது சி-07 |

01. 2023 ஏப்ரல் 06 ஆம் திகதியன்று ‘‘தினமின’’, ‘‘டெயிலி நியுஸ்’’ மற்றும் ‘‘தினகரன்’’ ஆகிய தேசிய புதினப்பத்திரிகைகளின் மூலம் மேல் மாகாணம், மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் மேலேயுள்ள வேலைக்காக பிரசுரிக்கப்பட்ட விலைமனுக்களுக்கான அழைத்தல் தொடர்பானது.

02. விலைமனுதாரர்கள், ஆர்வமுள்ள சாரார் மற்றும் பொதுமக்களுக்கு மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டவாறு **CIDA** தரமானது திருத்தப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

03. மேலே குறிப்பிட்டுள்ள புதினப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட முன்னைய விலைமனுக்களுக்கான அழைத்தலில் கூறப்பட்ட ஏனைய அனைத்து நிபந்தனைகளிலும் எவ்வித மாற்றமுமில்லையென தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா.)**
**இல. 59, புனித செபஸ்தின் மேடு,**
**கொழும்பு-12.**

10.04.2023.

## கேள்வி கோரலுக்கான அழைப்பு

### மேல் மாகாண கல்வித் திணைக்களம்

### கொழும்பு வலயக் கல்வி அலுவலகத்திற்குரித்தான பாடசாலைகளுக்கு கணனிகள் மற்றும் பாடசாலைகளுக்கான பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்காக விலைகளை வழங்குதல்

கொழும்பு வலயக் கல்வி அலுவலகத்தின் சார்பில் அதன் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் சேவைகளை வழங்குதல், பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக 2023-05-17ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

பொறுப்புக்கூறல் கொழும்பு வலயக் கல்வி அலுவலக பெறுகைக் குழு

| தொ. இல. | பொருட்கள் / பண்டங்கள்/ சேவைகளின் வகை | மீளளிக்கப்படும் பிணை வைப்பு ரூ. ச. | மீளளிக்கப்படாத கட்டணம் ரூ. ச. |
|---|---|---|---|
| 1. | கோத்தமி மகளிர் வித்தியாலயத்திற்கு பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல் | 20000.00 | 500.00 |
| 2. | யசோதரா வித்தியாலயத்திற்கு பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல் | 20000.00 | 500.00 |
| 3. | கொழும்பு வலயக் கல்வி அலுவலகத்திற்கு 04 கணனிகளைக் கொள்வனவு செய்தல் | 16000.00 | 500.00 |

02. கேள்வி கோரலானது தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் மூலம் மேற்கொள்ளப்படும்.
03. கொள்வனவு செய்யும் அளவானது மேற்படி மதிப்பீட்டுத் தொகை மற்றும் ஒரு அலகிற்கான விலையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். (கொள்வனவு செய்யப்படும் அளவு விலையின் பிரகாரம் மாறுபடலாம்)
04. வழங்கல் கட்டளை விடுக்கப்பட்டதன் பின் அந்தப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை 03 வாரத்திற்குள் (21 நாட்கள்) வழங்குதல் வேண்டும். அவ்வாறல்லாவிட்டால் வழங்க முடியுமான திகதியைக் குறிப்பிடுதல் வேண்டும்.
05. மேற்படி கேள்விக்காக 2023-04-17ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2023-05-17ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையான கடமை நாட்களில் (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை) வழங்கப்படும் என்பதுடன் கேள்வி ஆவணப் பிரதிகளை மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் மீளளிக்கப்படாத கட்டணத்தை வலயக் கல்வி அலுவலகத்தின் சிறாப்பருக்குச் செலுத்திய பற்றுச்சீட்டை பெறுகைப் பிரிவிற்குச் சமர்ப்பிப்பதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம்.
06. கொழும்பு வலயக் கல்விப் பணிப்பாளரின் பெயருக்கு மீளளிக்கப்படாத கட்டணத்தைச் (ரூபா 500.00) செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் நிறுவனக் கடிதத் தலைப்பில் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்தல் வேண்டும். மீளளிக்கப்படும் பிணை வைப்பை வங்கிக் கட்டளையொன்றின் மூலம் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் அது 2023-05-17ஆம் திகதி முதல் 6 மாத காலத்திற்குச் செல்லுபடியாதல் வேண்டும்.
07. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை 2023-05-17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கொழும்பு வலயக் கல்வி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது வலயக் கல்விப் பணிப்பாளர், கொழும்பு வலயக் கல்வி அலுவலகம், விதானகே மாவத்தை, கொழும்பு 02 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் .................. பொருட்டான விலைமனுக்கள் எனச் சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
08. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.
09. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடன் 2023-05-17ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கொழும்பு வலயக் கல்வி அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும். இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
10. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் 0112447116 எனும் தொலைபேசி இலக்கத்தில் வலயக் கல்வி அலுவலகத்தின் கணக்காளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**கொழும்பு வலயக் கல்வி அலுவலகம்,**
**விதானகே மாவத்தை,**
**கொழும்பு-02.**
2023-04.12

## பங்களாதேஷ் மகளிர் அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம்



மூன்று ஒருநாள் மற்றும் மூன்று டி20 போட்டிகளில் ஆடுவதற்காக பங்களாதேஷ் மகளிர் அணி ஏப்ரல் கடைசி மற்றும் மே மாதங்களில் இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது.

அனைத்துப் போட்டிகளும் கொழும்பில் நடைபெறவுள்ள நிலையில் ஒருநாள் போட்டிகள் பீ. சரா ஓவல் மைதானத்திலும் டி20 போட்டிகள் எஸ்.எஸ்.சி மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

இதன்படி ஒருநாள் போட்டிகள் ஏப்ரல் 29 தொடக்கம் மே 4 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதோடு இந்தத் தொடர் ஐ.சி.சி மகளிர் சம்பியன்சிப்பின் ஓர் அங்கமாக இடம்பெறவுள்ளது.

வரும் ஏப்ரல் 25 ஆம் திகதி இலங்கை வரும் பங்களாதேஷ் மகளிர் ஏப்ரல் 27ஆம் திகதி இலங்கை கிரிக்கெட் சபை தலைவர் அணியுடன் பயிற்சிப் போட்டி ஒன்றில் ஆடும்.

மகளிர் சம்பியன்சிப் அட்டவணையில் இலங்கை தற்போது 7ஆவது இடத்தில் இருப்பதோடு பங்களாதேஷ் அணி 9 ஆவது இடத்தில் உள்ளது.

ஒருநாள் தொடரை அடுத்து இரு அணிகளுக்கும் இடையிலான டி20 போட்டிகள் நடைபெறவிருப்பதோடு மே 7 ஆம் திகதி நடைபெறும் பயிற்சிப் போட்டியுடனேயே அந்தத் தொடர் ஆரம்பிக்கும்.

மூன்று டி20 போட்டிகளும் மே 09, 11 மற்றும் 12ஆம் திகதிகளில் நடைபெறும்.

# உலகக் கிண்ண வலைப்பந்து: இலங்கைக் குழாம் அறிவிப்பு

பதினாறாவது உலகக் கிண்ண வலைப்பந்து போட்டிக்கான இலங்கையின் 12 பேர் கொண்ட குழாத்தை தேசிய வலைப்பந்து தெரிவுக் குழு பரிந்துரைத்து ஒப்புதலுக்காக விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவுக்கு அனுப்பியுள்ளது.

உலகக் கிண்ண வலைப்பந்து போட்டி வரும் ஜூலை 28 ஆம் திகதி தொடக்கம் ஒகஸ்ட் 6 ஆம் திகதி வரை தென்னாபிரிக்காவின் கேப்டவுன் நகரில் நடைபெறவுள்ளது. இதற்கான இறுதி தெரிவுப் போட்டி சுகததாச உள்ளக அரங்கில் நடைபெற்றது.

இதில் சிங்கப்பூரில் கடந்த செப்டெம்பர் மாதம் நடைபெற்ற ஆசிய வலைப்பந்து சம்பியன்சிப் போட்டியில் வெற்றியீட்டிய இலங்கை அணியில் தேர்வுப் போட்டிக்கு பங்கேற்காத இரு வீராங்கனைகள் தவிர்த்து ஏனைய வீராங்கனைகள் உலகக் கிண்ணத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.



இந்தத் தெரிவுப் போட்டியில் பங்கேற்காத ஹசித்தா மெண்டிஸ் மற்றும் ரஷ்மி பெரேரா ஆகிய வீராங்கனைகளே தேர்வு செய்யப்படவில்லை.

எனினும் இந்தத் தெரிவுப் போட்டியில் பங்கேற்காத முன்னணி வீராங்கனை தர்ஜனி சிவலிங்கம் பரிந்துரைக்கப்பட்டிருக்கும் 12 பேர் குழாத்தில் இடம்பெற்றுள்ளார்.

6 அடி 9 அங்குலம் உயரம் கொண்ட 44 வயதான தர்ஜினி, தற்போது அவுஸ்திரேலியாவின் விக்டோரியன் வலைப்பந்து லீக்கில் ஆடிவருகிறார். ஆசிய வலைப்பந்து தரவரிசையில் தற்போது முதலிடத்தை பெற்றிருக்கும் இலங்கை உலக தரவரிசையில் 14ஆவது இடத்தில் உள்ளது.

இலங்கை குழாம்: திசால அலகம, செமினி அல்விஸ், சானிக்க பெரேரா, கயான்ஜலி அமரவன்ச, ரஷ்மி திவ்யாஞ்சலி, துலங்கி வன்னித்திலக்க, மல்மி ஹெட்டியராச்சி, கயானி திஸாநாயக்க, சத்துரங்கி ஜயசூரிய, காயத்ரி கௌசல்யா, தர்ஜினி சிவலிங்கம், பாஷினி யோசித டி சில்வா.

# யாழ். மத்திய கல்லூரி சம்பியன்

பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுக்கு உட்பட்ட பிரிவு மூன்று குழு ஏ இற்கான இறுதிப் போட்டியில் திம்பிரிகஸ்கட்டுவ, மாரிஸ் ஸ்டெல்லா கல்லூரிக்கு எதிராக முதல் இன்னிங்ஸில் வெற்றியீட்டியதன் மூலம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சம்பியன் பட்டத்தை வென்றது.



கொழும்பு, புனித ஜோசப் கல்லூரி மைதானத்தில் நேற்று (11) நிறைவடைந்த போட்டி வெற்றி தோல்வி இன்றி சமநிலையில் முடிந்தபோதும் யாழ். மத்திய கல்லூரி அணி முதல் இன்னிங்ஸில் 42 ஓட்டங்களால் முன்னிலை பெற்று போட்டியில் ஆதிக்கம் செலுத்தியது.

இதில் யாழ். மத்திய கல்லூரி முதல் இன்னிங்ஸில் 223 ஓட்டங்களை பெற்ற நிலையில் மாரிஸ் ஸ்டெல்லா கல்லூரி முதல் இன்னிங்ஸுக்காக 181 ஓட்டங்களையே பெற்றது. இந்நிலையில் நேற்று தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த யாழ். மத்திய கல்லூரி அணி 42.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 216 ஓட்டங்களை பெற்றது.

இதன்போது வேகமாக துடுப்பெடுத்தாடிய அணித்தலைவர் அனந்தன் கஜன் 62 ஓட்டங்களை பெற்றார். இந்தப் ஓட்டங்களைப் பெறுவதற்கு அவர் 45 பந்துகளுக்கு முகம் கொடுத்து 7 பௌண்டரிகள் மற்றும் 4 சிக்ஸர்களை விளாசினார்.

தகுதாஷ் அபிலாஷ் ஆட்டமிழக்காது 46 ஓட்டங்களைப் பெற்றார்.

மாரிஸ் ஸ்டெல்லா கல்லூரி சார்பில் விஷ்வ பீரிஸ் 7 விக்கெட்டுகளை பதம்பார்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் கடைசி நேரத்தில் மாரிஸ் ஸ்டெல்லா கல்லூரிக்கு 259 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. எனினும் நேற்று கடைசி நாள் ஆட்ட நேர முடிவின்போது மாரிஸ் ஸ்டெல்லா கல்லூரி 17 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 60 ஓட்டங்களை பெற்றது.

## வியாஸ்காந்துக்கு சங்கக்கார பாராட்டு



நடைபெற்று வரும் இந்திய பிரீமியர் லீக் தொடரில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்கு ஆதரவு அளித்ததற்கு இலங்கையின் இளம் சுழற்பந்து வீச்சாளர் விஜயகாந்த் வியாஸ்காந்துக்கு இலங்கை முன்னாள் வீரர் குமார் சங்கக்கார பாராட்டுகளைத் தெரிவித்துள்ளார்.

லங்கா பிரீமியர் லீக்கில் ஜப்னா கிங்ஸ் அணிக்காக ஆடும் விஜயகாந்த், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியில் வலைப்பந்து வீச்சாளராக செயற்பட்டார். அந்த அணியின் தலைமை பயிற்சியாளராக குமார் சங்கக்கார உள்ளார்.

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியில் இருந்து நேற்று அவர் விடைபெறும் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதனை அடுத்து சங்கக்கார அவருக்கு பாராட்டுகளைத் தெரிவித்தார். அவர் சிறந்த முறையில் பந்து வீசியதாகவும் சிறந்தவர்களிடம் இருந்து கற்றுக் கொண்டதாகவும் சங்கக்கார குறிப்பிட்டுள்ளார்.

விஜயகாந்த் இலங்கை ஆடையில் நாட்டை பிரதிநிதித்துவப்படுத்துவதை விரைவில் காண எதிர்பார்ப்பதாகவும் சங்கக்கார குறிப்பிட்டார்.

"ராஜஸ்தான் பந்துவீச்சு குழாத்தில் இருந்து விஜயகாந்த் இன்று (11) வெளியேறிச் செல்கிறார். எம்முடன் அவர் இணைந்தது கௌரவமாகும். அவர் சிறந்தமுறையில் பந்துவீசியதோடு சிறந்தவர்களிடம் இருந்து கற்றுக் கொண்டார். சிறந்த திறமையை பெற்றிருக்கும் அவர் இதே புன்னகையுடன் தனது நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கை நிறத்தில் காண எதிர்பார்க்கிறேன்" என்று சங்கக்கார ட்விட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

## பெண் மீது பிரம்படி கொடுத்து தண்டனை வழங்கியோர் கைது



திருமணத்திற்கு அப்பால் உறவு வைத்திருந்ததாக குற்றம்சாட்டப்பட்ட பெண்ணுக்கு பிரம்படி மற்றும் கல்லெறிந்து தண்டனை வழங்கிய குற்றச்சாட்டில் பங்களாதேஷில் ஒரு முஸ்லிம் அறிஞர் மற்றும் மூன்று கிராமத்தினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.


இமாம் ஒருவர் மதத் தீர்ப்பு அளித்ததை அடுத்து பெண் ஒருவருக்கு கடந்த வாரம் 82 பிரம்படிகளும் சிறு கற்களைக் கொண்டு 80 தடவை கல்லெறிந்தும் தண்டனை வழங்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பெண் 17 பேர் மீது குற்றவியல் வழக்குத் தொடுத்ததை அடுத்து நாட்டின் வடங்கில் உள்ள ஹபிகஞ்ச் நகரில் உள்ள பள்ளிவாசலின் இமாம் உட்பட நான்கு பேர் செவ்வாய்க்கிழமை (11) கைது செய்யப்பட்டதாக பொலிஸ் பரிசோதகர் சாகிர் ஹொசைன் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷின் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான ஒடுக்குமுறையை தடுக்கும் சட்டத்தின் கீழ் இந்த வழக்குத் தொடுக்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

30 வயதான அந்தப் பெண் உள்ளூர் முச்சக்கர வண்டி ஓட்டுநருடன் தொடர்பு வைத்திருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் செய்தி அறிந்து வளைகுடாவில் வேலைபார்த்திருந்த பெண்ணின் கணவனும் நாடு திரும்பி இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

## பணி நீக்கப்பட்ட ட்விட்டர் அதிகாரிகள் மூவர் வழக்கு



இலொன் மஸ்க் கடந்த ஆண்டு ட்விட்டர் சமூக ஊடகத்தை கையகப்படுத்தியதை அடுத்து பணி நீக்கம் செய்யப்பட்ட அந்த சமூக ஊடகத்தின் மூன்று முன்னணி நிறைவேற்று அதிகாரிகளும் வழக்குத் தொடுத்துள்ளனர்.

ட்விட்டரில் இருந்தபோது தமது வேலைகளுடன் தொடர்புபட்ட வழக்கு, விசாரணைகள் மற்றும் கொங்கிரஸ் விசாரணைகளுக்காக செலவிட்ட தொகையை செலுத்துமாறு கோரியே இவர்கள் வழக்குத் தொடுத்துள்ளனர். ட்விட்டரின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி பரக் அக்ரவால், நிறுவனத்தின் முன்னாள் தலைமை சட்ட மற்றும் நிதி அதிகாரிகளே இவ்வாறு வழக்குத் தொடுத்துள்ளனர். தமக்கு ஒரு மில்லியன் டொலருக்கு மேல் செலுத்த வேண்டி இருப்பதாகவும் ட்விட்டர் அதனை செலுத்த சட்டரீதியாக கடப்பாடு பெற்றிருப்பதாகவும் இவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## சர்வதேச செய்திகள்

# சீனாவை அடுத்து பிலிப்பைன்ஸூடன் அமெரிக்கா பாரிய போர் ஒத்திகை

தாய்வானைச் சூழ சீனா பாரிய இராணுவ ஒத்திகை ஒன்றை பூர்த்தி செய்த அடுத்த நாளான நேற்று (11) அமெரிக்கா மற்றும் பிலிப்பைன்ஸ் இணைந்து மிகப்பெரிய இராணுவ ஒத்திகை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

தாய்வான் ஜனாதிபதி அமெரிக்க பாராளுமன்ற சபாநாயகரை கடந்த வாரம் சந்தித்ததை அடுத்து சீனா, கடந்த மூன்று நாட்களாக தாய்வானை முடக்கும் வகையில் போர் ஒத்திகையை நடத்தியது.

இந்தப் போர் ஒத்திகையை அமெரிக்கா கண்டித்ததோடு, இது பொறுப்பற்ற செயல் என்றும் தமக்கு அமெரிக்கா செல்வதற்கு உரிமை இருப்பதாகவும் தாய்வான் ஜனாதிபதி ட்சாய் இன் வென் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அமெரிக்கா ஆரம்பித்திருக்கும் போர் ஒத்திகை முன்னர் திட்டமிட்டதாகும்.

இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் திறந்த



மற்றும் சுதந்திரமான அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கான தங்கள் அர்ப்பணிப்பை இந்தப் பயிற்சிகள் காட்டுவதாக பிலிப்பைன்ஸ் மற்றும் அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றனர்.

பிலிப்பைன்ஸூடனான வருடாந்த பலிகடான் ஒத்திகை தொடர்பில் அமெரிக்கா கடந்த மாதம் அறிவித்ததோடு இதுவரை நடந்ததில் மிகப்பெரியது என்றும் குறிப்பிட்டிருந்தது. இதில் அமெரிக்காவில் இருந்து 12,000 துருப்புகள் உட்பட 17,000க்கும் அதிகமான துருப்புகள் பங்கேற்கின்றன.

இரண்டு வாரங்கள் இடம்பெறும் இந்தப் போர் ஒத்திகையில் தென் சீன கடலில் போர் கப்பல்களை இலக்குவைத்துத் தாக்குதல் நடத்துவது போன்ற ஒத்திகைகளும் இடம்பெறவுள்ளன.

எனினும் தாய்வானை ஒட்டிய விவகாரத்துடன் தொடர்புபட்டதாக இந்தப் போர் ஒத்திகை இருக்காது என்று அமெரிக்கா மற்றும் பிலிப்பைன்ஸ் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த பெப்ரவரியில் பிலிப்பைன்ஸூடன் அமெரிக்கா புதிய பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டதோடு அதில் போட்டி இருக்கும் நீர்ப்பகுதிக்கு அருகில் உள்ள பிலிப்பைன்ஸ் தீவுகளில் நான்கு புதிய கடற்படை தளங்களை அமைக்க ஒப்பந்தமாகியுள்ளது.


பிலிப்பைன்ஸ் மற்றும் தென் சீன கடல் பகுதியைக் கொண்ட நீர்ப் பாதை உலகின் மிகப் பெறுமதி மிக்க வர்த்தகப்பாதையாக இருப்பதோடு, அண்மைய ஆண்டுகளில் சீனா இதற்கு உரிமை கோரும் நிலையில் தற்போது பிரச்சினைக்குரிய பகுதியாக மாறியுள்ளது.

## இஸ்ரேல் படையின் சூட்டில் பலஸ்தீன சிறுவன் பலி



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் ஜெரிகோ நகருக்கு அருகில் உள்ள அகதி முகாமில் இஸ்ரேலிய படை திங்கட்கிழமை (10) நடத்திய சுற்றிவளைப்பில் 15 வயது பலஸ்தீன சிறுவன் ஒருவன் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் மூவர் காயமடைந்துள்ளனர். ஜெரூசலம் அல் அக்ஸா பள்ளிவாசலில் கடந்த வாரம் இடம்பெற்ற வன்முறைகளைத் தொடர்ந்து நீடிக்கும் பதற்றத்தின் தொடர்ச்சியாகவே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் முஹமது பாயிஸ் பல்ஹான் என்ற அந்த சிறுவனின் தலை, மார்பு மற்றும் வயிற்றுப் பகுதிகளில் சூடு நடத்தப்பட்டிருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## அமெரிக்க வங்கி ஊழியர் துப்பாக்கிச் சூடு: ஐவர் பலி



அமெரிக்காவின் லுஸ்வில்லே நகரில் உள்ள வங்கி ஒன்றில் ஊழியர் ஒருவர் இஸ்டாகிராமில் நேரடி ஒளிபரப்புச் செய்து நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஐவர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் 40 தொடக்கம் 64 வயதுக்கு இடைப்பட்டவர்களே கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் ஒன்பது பேர் காயமடைந்துள்ளனர். உடன் செயல்பட்ட பொலிஸார் 23 வயது கோனர் ஸ்டட்ர்ஜன் என்ற துப்பாக்கிதாரியுடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில் அவரை சுட்டுக் கொன்றுள்ளனர். நகர மையத்தில் உள்ள ஓல்ட் நெஷனல் வங்கியில் அமெரிக்க நேரப்படி கடந்த திங்கள் (10) காலை 8.30 மணி அளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஏப்ரல் மாதம் 12ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.